கல்விப் பொதுத் தராதரப்பத்திர உயர்தர பரீட்சை

## G.C.E. ADVANCED LEVEL

# பொருளியல்

(எதிர்பார்க்கை மாதிரி வினாத்தாள் மிக விரிவான விடைகளுடன்)



எஸ். ஸ்ரீராம் B.A. (Econ)

வெளியீடு
லங்கா புத்தகசாலை (தனியார்) வரையறுக்கப்பட்டது
F.L. 1.14, டயஸ் பிளேஸ், குணசிங்ஹபுர,
கொழும்பு - 12,
தொ.பே : 0112341942

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்விப் பொதுத் தராதரப்பத்திர உயர்தர பரீட்சை

# G.C.E. ADVANCED LEVEL

# பொருளியல்

(எதிர்பார்க்கை மாதிரி வினாத்தாள் மிக விரிவான விடைகளுடன்)


ஆக்கம்

**எஸ். ஸ்ரீராம்** B.A. (Econ)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முன்னுரை :

புதிய பாடத்திட்டத்திற்கு அமைய 2013ஆம் ஆண்டிலிருந்து பரீட்சைக்குத் தோற்றுவோருக்கான பொருளியல் எதிர்பார்க்கை மாதிரி வினாத்தாள் விடைகளுடன் வெளியிடுவதில் மட்டற்ற மகிழ்ச்சியடைகின்றேன்.

இம்மாதிரி வினாத்தாள் மற்றும் அதற்கான விடைகள் மிக விரிவான முறையில் தரப்பட்டுள்ளதாலும், மிக அண்மிய தகவல்களையும், பல நுட்பங்களைப் பயன்படுத்தி எழுதப்பட்டுள்ளதாலும் இந்நூல் புதிய அனுபவங்களை மாணவர்களுக்கு வழங்கும் என நம்புகின்றேன்.

இந்நூலைப் பயன்படுத்தும் அனைத்து மாணவர்களினதும் பரீட்சைப் புள்ளிகளை உயர்த்த பெரிதும் உதவும் என்பது எமது அசைக்க முடியாத நம்பிக்கை.

சிறந்த பெறுபேறுகளைப் பெற்று வாழ்க்கையில் வெற்றிபெற வாழ்த்துகிறேன்.

**-நன்றி-**

**ஆசிரியர்**
**எஸ். ஸ்ரீராம்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## புகுமுன் சில வார்த்தைகள் . . . . . . . .

க.பொ.த. உயர்தரப் பரீட்சை மிகக் கடுமையான போட்டிப் பரீட்சையாகவும் மாணவ மாணவிகளது எதிர்காலத்தை நிர்ணயிப்பதில் மிகவும் காத்திரமானதொன்றாகவும் தீர்க்கமானதொன்றாகவும் அமைகின்றது. இவற்றையெல்லாம் மனதிற் கொண்டு உங்களது பெறுபேறுகளை உயர்த்த கடந்தகால வினாப்பத்திரங்களுக்கும் மாதிரி வினாத்தாளும் அவற்றுக்கான விடைகளையும் வழங்கி உள்ளேன். அத்துடன் வினாப்பத்திர அமைப்பை முடிந்தவரை தெளிவாக தேர்ச்சி, தேர்ச்சி மட்டங்கள், நோக்கங்கள், புள்ளிகள் என்ற அடிப்படையில் பட்டியற்படுத்தித் தந்துள்ளேன்.

பரீட்சை அண்மிக்கின்ற காலங்களில் பிரஸ்தாபிக்கின்ற பல்வேறு விடயங்களை கவனத்திற் கொண்டு பொருளியல் பகுதி II வினாத்தாள் ஒன்றினைத் தயாரித்து இணையத் தளத்தில் வழங்குகின்றேன். நீங்கள் www.ecraam.blogspot.com எனும் முகவரிக்குச் செல்வதன் மூலம் அதனைப் பார்வையிடமுடியும்.

பதினான்காவது நூலாக அமையும் இந்நூல் எனது பல வருடகால கற்பித்தல், மதிப்பீட்டு அனுபவத்தைக் கொண்டு தயாரிக்கப்பட்டுள்ளது. ஆகவே மாணவர்களின் பொருளியல் பரீட்சைப் புள்ளிகளை இந்நூல் உயர்த்தும் என்பது திண்ணம்.

சிறந்த பெறுபேறுகளைப் பெற்று வாழ்க்கையில் வெற்றிபெற இறையருள் என்றும் துணைநிற்பதாக!

நன்றி

ஆசிரியர்
S. ஸ்ரீராம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| இல. | தேர்ச்சி | 2013 எதிர்பார்க்கை வினாத்தாள் PI | PII |
|---|---|---|---|
| 1 | பொருளாதார அமைப்பொன்றின் அடிப்படைப் பொருளாதாரப் பிரச்சினைகளைத் தீர்த்துக்கொள்ளக்கூடிய முறையினைப் பகுப்பாய்வு செய்வர் | 1, 2, 3, 4, 5, 6 | 1 |
| 2 | சந்தை ஒன்றில் வீட்டுத் துறையினரும் நிறுவனத் துறையினரும் தர்க்க ரீதியாகச் செயற்படும் விதத்தைப் பகுப்பாய்வு செய்வர். | 7, 8, 9,10, 11 12, 13 | 2, 3 |
| 3 | சந்தையினுள் உற்பத்தி நிறுவனங்கள் தர்க்கரீதியாக செயற்படும் விதத்தினைப் பகுப்பாய்வு செய்வர். | 14, 15, 16, 17 | |
| 4 | பேரினப் பொருளாதாரச் செயற்பாட்டைக் கருத்திற்கொண்டு தேசிய கணக்கீட்டைத் தயாரிப்பதற்கான ஆயத்தத்தை வெளிக்காட்டுவார். | 18, 19, 20 | 4 |
| 5 | பேரினப் பொருளாதார சமநிலை தீர்மானிக்கப்படும் விதத்தினை விளக்குவார். | 21, 22, 23, 24, 25 | 5 |
| 6 | பேரினப் பொருளாதார செயற்பாட்டை பாதிக்கும் விடைமட்ட வேறுபாட்டை ஆய்வு செய்வார். | 26 | 8 |
| 7 | பொருளாதார செயற்பாட்டுக்கு பணம் மற்றும் வங்கியமைப்பு பங்களிக்கும் விதத்தினை ஆராய்வார். | 27, 28, 29, 30 | 7 |
| 8 | பேரினப் பொருளாதார நோக்கங்களை அடைந்து அடைந்து கொள்வதற்காக அரசாங்கம் தலையிடும் விதத்தை விளக்குவார். | 31, 32, 33, 34, 35 | 6 |
| 9 | சர்வதேச வர்த்தகமும் நிதியும் நாட்டில் பேரினப் பொருளாதாரத்திற்கு ஏற்படுத்தும் தாக்கத்தை ஆய்வு செய்வார். | 36, 37, 38, 39, 40, 41, 43, 47 | 9 |
| 10 | அபிவிருத்தியின் பல்வேறுபட்ட தன்மையினை சமநிலையாக விளக்கி நிலைத்து நிற்கக்கூடிய அபிவிருத்திக்கு பங்களிக்க வேண்டியதன் அவசியத்தைக் காட்சிப்படுத்துவார். | 42, 44, 46 | 10 |
| 11 | சுதந்திரத்தின் பின்னரான இலங்கைப் பொருளாதாரத்தின் செயற்பாட்டினைச் சமநிலையாக மதிப்பிடுவார். | 48, 49, 50 | |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விபரிப்பு அட்டவணை

| 2012 | | 2011 | | 2010 | | | | 2009 | | | | 2008 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| P I | P II | P I | P II | P I | | P II | | P I | | P II | | P I | | P II | |
| | | | | I | II | I | II | I | II | I | II | I | II | I | II |
| 1,2,3,4<br>5,6 | 1 | 1,2,3,4,5,6<br>7,8,9 | 1 | 1,2,3<br>4,5 | 1,2 | | | 1,2,3<br>4,5 | 1,2 | | | 1,2,3 | 1,2 | | |
| 7,8,9,10,<br>11,12,13<br>14 | 2 | 10,11,12,<br>13,14,15<br>16,17,18 | 2 | 6,7,8,<br>9 | 3 | | | 6,7,8<br>11,12,<br>16,18,<br>19 | 3 | | | 4,5,6,<br>9 | 3,4 | | |
| 15,16,17 | 3 | 19,20,21,<br>22 | 3 | 10,11,<br>12,13 | 4 | | | 9,10,<br>17,20 | 4 | | | 7,8,10<br>11,12 | | | |
| 18,19,20<br>21 | 4 | 23,24,25 | 4 | 14,15,<br>16,17 | 5 | | | | 5 | | | 13,14 | 5 | | |
| 22,23,24 | 5 | 26,27,28,<br>29,30 | 5 | | 6 | | | 13,14,<br>15 | 6 | | | 15,16<br>17 | 6 | | |
| 26 | | 34 | | | | 4 | | | | | 2 | | | 5 | 3 |
| 25,27,28<br>29,30 | 6 | 31,32,33 | 6 | 20 | | 1,2,3 | 1,2 | | | 1,2,3<br>4,5,6 | 1,2 | | | 1,2,3,<br>4 | 1,2 |
| 31,32,33<br>34,35 | 7 | 35,36,37 | 7 | 18.19 | 7,8 | 18 | | | 7,8 | 14 | | 18,19,<br>20 | 7 | 19 | |
| 36,37,38,<br>39,40,41<br>43,49 | 8 | 38,39,40<br>41,42,43 | 8 | | | 5,6,7<br>8,9,11,<br>12,13,<br>16,17,<br>19,20 | 3,4 | | | 7,8,9<br>10,11,<br>12,13,<br>17 | 3,4,5 | | | 6,7,8,<br>9,10,<br>11,12,<br>13,14,<br>20 | 4,8 |
| 42,44,45,<br>46,47,48,<br>50 | 9 | 44,45,46<br>47,48,50 | 9 | | | 10,14,<br>15 | 5,7 | | | 15,16,<br>19 | 6,7 | | | 15,16,<br>17,18 | 5,6 |
| | 10 | 49 | 10 | | | | 6, 8 | | | 18,20 | 8 | | 8 | | 7 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | நோக்கங்கள் | |
|---|---|---|
| ஆண்டு | அறிவு (Knowledge) | கிரகித்தல் (Comprehension) |
| **A/L 2012** | | |
| Part - I | 1, 4, 6, 8, 10, 11, 14, 16, 17, 18, 20, 30, 31, 33, 35, 41, 42, 44, 48, 49, 50 | 39, 40, 43, 47 |
| Part - II | 1(i) 4 புள்ளி<br>6(i) 3 புள்ளி, (ii) 5 புள்ளி<br>(iii) 2 புள்ளி, (iv) 4 புள்ளி<br>10 (i, ii, iii, iv) 5 புள்ளி (each) | 2 (i, ii) 4 புள்ளி (each)<br>3 (i) 2 புள்ளி<br>(ii, iv) 4 புள்ளி (each)<br>4 (ii) 2 புள்ளி, (iii, iv) 5 புள்ளி (each), 5 (i) 4 புள்ளி, (ii) 2 புள்ளி<br>6 (v) 4 புள்ளி, 7 (i) 6 புள்ளி, (iii) 2 புள்ளி, 8 (v) 4 புள்ளி |
| **A/L 2011** | | |
| Part - I | 1, 3, 4, 6, 11, 12, 16, 18, 29, 32, 35, 39, 45, 49, 21, 29, 33, 43 | 19, 34, 50 |
| Part - II | 1(i, iii) 3 புள்ளி (each)<br>2 (i) 4 புள்ளி, 4 (i) 5 புள்ளி<br>6 (iii, v) 3 புள்ளி (each),<br>7 (i, iii) 4 புள்ளி, (iv, v) 5 புள்ளி,<br>8 (i) 4 புள்ளி, (ii) 5 புள்ளி,<br>9 (iiii) 4 புள்ளி | 1 (ii) 4 புள்ளி, (iv) 6 புள்ளி<br>2 (iii) 5 புள்ளி, 3 (ii) 2 புள்ளி,<br>(iii) 4 புள்ளி, (iv, v) 6 புள்ளி,<br>4 (ii, iv) 5 புள்ளி, 5 (i) 6 புள்ளி,<br>6 (i, ii) 3 புள்ளி, 7 (ii) 2 புள்ளி,<br>9 (i, ii, iv, v) 4 புள்ளி (each) |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விபரிப்பு அட்டவணை

| நோக்கங்கள் | | | |
|---|---|---|---|
| பிரயோகம் (Application) | பகுப்பு (Analysis) | மதிப்பீடு (Evaluation) | அறிவு<br>1. வரையறுப்பர்<br>2. அடையாளங்காண்பர்<br>3. பெயரிடுவர்<br>4. பட்டியற்படுத்துவர்<br>5. தெரிவு செய்வர்<br>6. கூறுவர் |
| 5, 13, 21, 22, 23, 24, 25, 27, 28, 32, 36, 37, 45 | 2, 3, 7, 9, 12, 15, 19, 26, 28, 34, 38, 46 | | கிரகித்தல்<br>1. விளக்குவர்<br>2. சுருக்கமாகக் கூறுவர் |
| 2 (iii) 4 புள்ளி (iv) 2 புள்ளி, 4 (i) 4 புள்ளி (v) 5 புள்ளி 5 (iii, iv) 6 புள்ளி | 1 (i, iii, iv, v) 4 புள்ளி 3(iii) 4 புள்ளி, (v) 6 புள்ளி, 7(ii, iv, v) 4 புள்ளி 8 (i, ii, iii, v) 4 புள்ளி, 9 (i, ii, iii, iv, v) 4 புள்ளி | 2 (v) 4 புள்ளி | பிரயோகம்<br>1. கணிப்பர்<br>2. கண்டுபிடிப்பர்<br>3. தீர்ப்பர்<br>4. பிரயோகிப்பர் |
| 13, 14, 17, 20, 22, 23, 24, 30, 31, 38, 40, 41, 42, 46 | 2, 5, 7, 8, 9, 10, 15, 25, 26, 28, 36, 37, 47, 48, 44 | | பகுப்பு<br>1. பகுத்துப் பார்ப்பர்<br>2. வகைப்படுத்துவர்<br>3. வேறுபடுத்துவர் (Distinguish)<br>4. பரீட்சிப்பர்<br>5. வித்தியாசம் காண்பர்<br>6. வேறுபடுத்துவர் (Differentiate) |
| 2 (iv) அ, ஆ, இ, ஈ 2 புள்ளி, 4(iii) 5 புள்ளி, 5 (iii) அ, ஆ, இ, ஈ 2 புள்ளி, உ-4 புள்ளி, 6 (iv) அ, ஆ, இ, ஈ - 2 புள்ளி | 1 (v) 4 புள்ளி, 2(ii) 3 புள்ளி, 3(i) 2 புள்ளி, 5(ii) 2 புள்ளி 8 (iii) 5 புள்ளி, (iv) 6 புள்ளி | 10 (i, ii, iii, iv, v) 4 புள்ளி (each) | மதிப்பீடு<br>1. மதிப்பிடுவர்<br>2. வேறுபடுத்துவர் (Differentiate)<br>3. விமர்சிப்பர் |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

0 1 2 → புள்ளிகள்


| தேர்ச்சிகள் | | |
|---|---|---|
| 1 | (1) | வளங்களின் அருமைத்தன்மை |
| 1 | (2) | உற்பத்தி இயல்தகவு வளையி |
| 1 | (3) | வளங்களின் பூரண பதிலீடு |
| 1 | (4) | சிற்றினப் பொருளியல் |
| 1 | (5) | இலவசப் பண்டம் |
| 1 | (6) | தாராள சந்தை முறை |
| 2 | (7) | கேள்வி கோட்டின் மீதான புள்ளியின் நகர்வு |
| 2 | (8) | நிரம்பல் வலையியின் நகர்வு |
| 2 | (9) | விலை நெகிழ்ச்சி |
| 2 | (10) | செயற்திறன் வாய்ந்த தளவிலை |
| 2 | (11) | கேள்வி நெகிழ்ச்சி |
| 2 | (12) | நிரம்பல் கேள்வி நெகிழ்ச்சி |
| 2 | (13) | நுகர்வோன் மிகை, உற்பத்தியாளன் மிகை, மீளமுடியா இழப்பு |
| 2 | (14) | குறைந்தபட்ச விலைக் கொள்கை |
| 3 | (15) | உற்பத்தி கோட்பாடு |
| 3 | (16) | நிறைபோட்டி நிறுவனம் |
| 3 | (17) | தனியுரிமைப் போட்டி |
| 4 | (18) | மொத்த உள்நாட்டு உற்பத்தி |
| 4 | (19) | வர்த்தக சகட ஓட்டம் |
| 4 | (20) | மொத்த உள்நாட்டு உற்பத்தி கணிப்பீடு |
| 4 | (21) | சந்தை விலைகளிலான தேசிய உள்நாட்டு உற்பத்தி அளவு கணிப்பீடு |
| 5 | (22) | முதலீட்டு மட்ட அளவு கணிப்பீடு |
| 5 | (23) | மொத்த கேள்வியின் அதிகரிப்பு |
| 5 | (24) | எல்லை நுகர்வு நாட்டம் |
| 7 | (25) | பணப்புழக்கச் சுற்றோட்ட வேகம் |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புள்ளிகள் 0 1 2

| தேர்ச்சிகள் | | |
|---|---|---|
| 9 | (26) | பணவீக்க இடைவெளி |
| 7 | (27) | வங்கி முறைமையில் பணநிரம்பல் அதிகரிப்பு |
| 7 | (28) | பணக்கேள்வி |
| 7 | (29) | பணப்பெருக்கி |
| 7 | (30) | திறந்த சந்தை நடவடிக்கை |
| 8 | (31) | சந்தைத் தோல்வி |
| 8 | (32) | வெளிவாரி விளைவுகள் |
| 8 | (33) | சந்தைத் தோல்வி |
| 8 | (34) | மேன்மைப் பொருட்களின் கேள்வி நெகிழ்ச்சி |
| 8 | (35) | இறைக்கொள்கை |
| 9 | (36) | சர்வதேச வர்த்தகம் |
| 9 | (37) | சென்மதி நிலுவை கணிப்பீடு |
| 9 | (38) | சென்மதி நிலுவை |
| 9 | (39) | முழு நன்மை கோட்பாடு |
| 9 | (40) | நாணயமாற்று வீதம் |
| 9 | (41) | நாணயமாற்று வீதம் |
| 10 | (42) | லோரன்ஸ் வளையி |
| 11 | (43) | பெயரளவு நாணயமாற்று வீதம் |
| 10 | (44) | நீண்டகால பொருளாதார வளர்ச்சி |
| 10 | (45) | தொழிற்படையின் பங்குகொள்ளல் வீதம் |
| 10 | (46) | பொருளாதார வளர்ச்சி |
| 10 | (47) | தங்கி வாழ்வோர் வீதம் |
| 10 | (48) | மானுட அபிவிருத்திச் சுட்டெண் |
| 11 | (49) | BRICS |
| 10 | (50) | வறுமைக குறிகாட்டி |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புள்ளிகள் (0 1 2 3 4 5 6)

| தேர்ச்சிகள் | வினா | |
|---|---|---|
| தேர்ச்சிகள் 7 | வினா 6(i) | பணத்தின் கேள்வி |
| | வினா 6(ii) | அண்மிய பணம், $M_2$ இல் இதன் கூறுகள் |
| | வினா6(iii) அ | வங்கியின் ஐந்தொகை |
| | வினா6(iii) ஆ | உச்ச கடன் அளவு கணிப்பீடு |
| | வினா 6(iv) | பண நிரம்பலின் உண்மையான விரிவாக்கத்தின் வேறுபாடு |
| | வினா 6(v) | மத்திய வங்கியின் திறந்த சந்தை நடவடிக்கை |
| தேர்ச்சிகள் 8 | வினா 7(i) | உலகப் பொதுப்பொருள், பொதுவளங்கள், அரைகுறைப் பெறுபொருட்கள் |
| | வினா 7(ii) | சட்டரீதியான வரித்தாக்கம், பொருளாதார வரித்தாக்கம் |
| | வினா7(iii) | வரிநடுநிலைத்தன்மை |
| | வினா 7(iv) | ஆரம்ப குறைநிலை, தேறிய காசுக் குறைநிலை |
| | வினா 7(v) | வரியல்லா வருவாய் மூலங்கள் |
| தேர்ச்சிகள் 9 | வினா 8(i) | ஒப்பீட்டு நன்மை |
| | வினா 8(ii) | சென்மதி நிலுவையின் பிரதான கணக்குகளும் வகுதிகளும் |
| | வினா 8(iii) | வர்த்தக மாற்று விகிதம், வர்த்தக நிலுவை |
| | வினா 8(iv) | உலக வர்த்தக நிறுவனம் (WTO) |
| | வினா 8(v) | முகாமை செய்யப்பட்ட மிதக்கும் நாணயமாற்று வீத முறை |
| தேர்ச்சிகள் 10 | வினா 9(i) | பொருளாதார வளர்ச்சியும் அதன் வீதமும் |
| | வினா 9(ii) | பொருளாதார வளர்ச்சிக் காரணிகள் |
| | வினா 9(iii) | மானுட அபிவிருத்திச் சுட்டெண்ணின் வரையறைகள் |
| | வினா 9(iv) | பல்பரிமாண வறுமையின் போக்குகள் |
| | வினா 9(v) | பிராந்திய சமமின்மைகளை குறைக்கும் நடவடிக்கைகள் |
| தேர்ச்சிகள் 11 | வினா 10(i) | இலங்கையின் மீதான பொருளாதார பின்னடைவு, மந்த கதியிலான மீட்சி என்பவற்றின் தாக்கம் |
| | வினா 10(ii) | அரசின் தொழில் முயற்சியின் குறைபாடுகள் |
| | வினா 100(iii) | தற்போதைய அபிவிருத்திக் கொள்கையின் பிரதான பண்புகள் |
| | வினா 9(iv) | திவிநெகும செயற்றிட்டத்தின் பண்புகள் |

தேர்ச்சிகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**Economics**

**G.C.E. A/L 2011 Part - I**

புள்ளிகள் (0, 1, 2)


| தேர்ச்சிகள் | | புள்ளிகள் |
|---|---|---|
| 1 | (1) | உற்பத்தி இயல்தகவு வளையி |
| 1 | (2) | பொருளியல் ஆய்வுப் பிரிவு |
| 1 | (3) | நியமக் கூற்று |
| 1 | (4) | இயற்கை வளங்கள் |
| 1 | (5) | பொருளாதாரப் பண்டம் |
| 1 | (6) | அமையச் செலவு (PPC) |
| 1 | (7) | பொருளாதார முறைமை |
| 1 | (8) | விலை பொறிமுறை |
| 1 | (9) | சந்தைப் பொருளாதாரத்தில் விலையின் பணிகள் |
| 2 | (10) | கேள்வி வளையியின் நகர்வு |
| 2 | (11) | கேள்வி வளையி |
| 2 | (12) | சாதாரண பொருட்களின் கேள்வி |
| 2 | (13) | விலைக்கேள்வி நெகிழ்ச்சி |
| 2 | (14) | நிரம்பல் வளையியில் விலை நெகிழ்ச்சி |
| 2 | (15) | சந்தைச் சமநிலை |
| 2 | (16) | விலைக்கேள்வி நெகிழ்ச்சி |
| 2 | (17) | நுகர்வோர் மிகை |
| 2 | (18) | உயர்ந்தபட்ச விலைக்கொள்கை |
| 3 | (19) | குறைந்து செல்லும் விளைவு விதி |
| 3 | (20) | குறுங்கால எல்லைச் செலவு |
| 3 | (21) | நிறைபோட்டி நிறுவனம் |
| 3 | (22) | நிறைபோட்டி நிறுவனம் |
| 4 | (23) | பெறுமதிச் சேர்க்கைக் கணக்கு |
| 4 | (24) | வர்த்தக சகட ஓட்டம், வெளியீட்டு இடைவெளி |
| 4 | (25) | தேறிய தேசிய உற்பத்தி |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| தேர்ச்சிகள் | | புள்ளிகள் 0 1 2 |
|---|---|---|
| 5 | (26) | நுகர்வுச் சார்பு |
| 5 | (27) | முதலீட்டுப் பெருக்கி |
| 5 | (28) | மொத்தக் கேள்விஅதிகரிப்பு |
| 5 | (29) | பெருக்கி |
| 5 | (30) | பொருளாதாரத்தில் வீட்டுத்துறை சேமிப்பு |
| 7 | (31) | வணிக வங்கியின் மிகை ஒதுக்கம் |
| 7 | (32) | வணிக வங்கியின் பொறுப்பு |
| 7 | (33) | நேர்மாற்று மீள்கொள்வனவு |
| 6 | (34) | பணவீக்கமின்மை |
| 8 | (35) | சந்தைத் தோல்வி |
| 8 | (36) | சந்தைப் பொருளாதாரத்தில் மேன்மைப் பொருள் |
| 8 | (37) | நுகர்வில் போட்டியற்றநிலை |
| 9 | (38) | சர்வதேச வர்த்தகம் |
| 9 | (39) | பல்பக்க நிதிநிறுவனம் |
| 9 | (40) | வர்த்தகமாற்று வீதம் |
| 9 | (41) | சென்மதி நிலுவை |
| 9 | (42) | நாணயமாற்று வீதம் |
| 9 | (43) | உலகமயமாக்கல் |
| 10 | (44) | பொருளாதார வளர்ச்சி |
| 10 | (45) | ஊழிய உற்பத்தித்திறன் |
| 10 | (46) | லோரன்ஸ் வளையி |
| 10 | (47) | வேலையற்றோர் வீதம் |
| 10 | (48) | பல்பரிமாண வறுமைக் குறிகாட்டி |
| 11 | (49) | மகிந்த சிந்தனை |
| 10 | (50) | தேசிய வறுமைக்கோடு |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**Economics**
**G.C.E. A/L 2011 Part - II**




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


புள்ளிகள் 0 1 2 3 4 5 6

| தேர்ச்சிகள் | வினா | விடயம் |
| --- | --- | --- |
| தேர்ச்சிகள் 7 | வினா 6(i) | விருப்பங்களின் இரட்டைப் பொருந்துகையின்மை |
| | வினா 6(ii) | கடன் அட்டை |
| | வினா 6(iii) | வங்கி முறையில் பணத்தின் உருவாக்கம் |
| | வினா 6(iv) அ | பணநிரம்பலின் தாக்கம் |
| | வினா 6(iv) ஆ | கடனின் உச்ச அளவு |
| | வினா 6(iv) இ | முழு வங்கி முறையில் ஏற்படக்கூடிய வைப்புக்களின் உச்ச அளவு |
| | வினா 6(iv) ஈ | மாணவர் கருத்து |
| | வினா 6(v) | கடன் திட்டங்கள் (மத்திய வங்கி) |
| தேர்ச்சிகள் 8 | வினா 7(i) | அரசாங்க பொருளாதாரத் தொழிற்பாடுகள் |
| | வினா 7(ii) | தூய பொதுப் பொருள் |
| | வினா 7(iii) | வெளிவாரி விளைவு |
| | வினா 7(iv) | வரி வருமான மூலாதாரங்கள் |
| | வினா 7(v) | செலவீட்டு வகுதியில் அடங்குபவை |
| தேர்ச்சிகள் 9 | வினா 8(i) | இறக்குமதி, ஏற்றுமதி வகைகள் |
| | வினா 8(ii) | வர்த்தகத்தை கட்டுப்படுத்தல் தொடர்பான வாதங்கள் |
| | வினா 8(iii) | பெயரளவுப் பாதுகாப்பு வீதம், பயனுறுதி வாய்ந்த பாதுகாப்பு வீதம் |
| | வினா 8(iv) | நெகிழ்தன்மை வாய்ந்த, நிலையான மற்றும் முகாமை செய்யப்பட்ட நாணயமாற்றுவீதம் |
| தேர்ச்சிகள் 10 | வினா 9(i) | யாவையும் உள்ளடக்கிய பொருளாதார வளர்ச்சி |
| | வினா 9(ii) | பொருளாதார வளர்ச்சி, பேண்தகு அபிவிருத்தி |
| | வினா 9(iii) | அரசாங்க கொள்கைகளின் செல்வாக்கு |
| | வினா 9(iv) | பொருளாதார அபிவிருத்திச் சுட்டெண் |
| | வினா 9(v) | மனித அபிவிருத்திச் சுட்டெண் |
| தேர்ச்சிகள் 11 | வினா 10(i) | மகிந்த சிந்தனை |
| | வினா 10(ii) | நேரடி வெளிநாட்டு முதலீடு |
| | வினா 10(iii) | நேரடி முதலீட்டிற்கான தடைகள் |
| | வினா 10(iv) | கமநெகும நிகழ்ச்சித் திட்டம் |
| | வினா 10(v) | தேசிய மற்றும் துறை ரீதியான வறுமை மட்டங்கள் |

தேர்ச்சிகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விலைசார் கேள்வி நெகிழ்ச்சியும் வரித்தாக்கமும்




| Ed | உற்பத்தியாளர் வரித்தாக்கம் | நுகர்வோர் வரித்தாக்கம் |
|---|---|---|
| $Ed = \alpha$ | முழுவதும் (100%) | பூச்சியம் |
| $Ed < 1$ | பெரும் பகுதி | சிறுபகுதி |
| $Ed = 1$ | அரைப்பகுதி | அரைப் பகுதி |
| $Ed > 1$ | சிறுபகுதி | பெரும்பகுதி |
| $Ed = 0$ | பூச்சியம் | முழுவதும் (100%) |

குறிப்பு :- என்னால் உருவாக்கப்பட்ட வரிப்படத்தினையே நீங்கள் மேலே பார்க்கிறீர்கள். இதனை ஒரு நுட்பமுறையாக நீங்கள் பயன்படுத்துவீர்கள் என நம்புகிறேன்.

நன்றி

ஆசிரியர் S. ஸ்ரீராம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

බලාපොරොත්තුව පුරශ්ණය අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (උසස් පෙළ) විභාගය, 2013 අගෝස්තු
*எதிர்பார்கை வினாத்தாள் கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர் தர)ப் பரீட்சை, 2013 ஓகஸ்ட்*
**Expectable Paper General Certificate of Education (Adv. Level) Examination, August 2013**


| | | |
|---|---|---|
| *ආර්ථික විද්‍යාව* I<br>*பொருளியல்* I<br>Economics I | **21 \| T \| I** | *පැය දෙකයි*<br>*இரண்டு மணித்தியாலங்கள்*<br>*Two hours* |

கவனிக்க :
* எல்லா வினாக்களுக்கும் விடை எழுதுக.
* விடைத்தாளில் தரப்பட்டுள்ள இடத்தில் உமது சுட்டெண்ணை எழுதுக.
* விடைத்தாளின் பிற்பக்கத்தில் தரப்பட்டுள்ள அறிவுத்தல்களைக் கவனமாக வாசிக்க.
* 1 தொடக்கம் 50 வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றுக்கும் (1), (2), (3), (4), (5) என எண்ணிடப்பட்ட விடைகளில் *சரியான* அல்லது *மிகப் பொருத்தமான* விடையைத் தெரிந்தெடுத்து, *அதனைக் குறித்து நிற்கும் இலக்கத்தைத் தரப்பட்டுள்ள அறிவுறுத்தல்களுக்கு அமைய* விடைத்தாளில் *புள்ளடி (x)* இடுவதன் மூலம் காட்டுக.

*ஆக்கம் : எஸ். ஸ்ரீராம்* MA (Econ) www.ecraam.blogspot.com

01. பேரின பொருளாதார மாறிகளை கொண்ட தொகுதி
(1) விலைமட்டம், வேலைமட்டம், சென்மதி நிலுவை.
(2) வேலைமட்டம், வெளிநாட்டு, நாணயமாற்று விகிதம், தேர்வு.
(3) கேள்வி, நிரம்பல், சந்தை அமைப்பு.
(4) வட்டி வீதம், வங்கி வீதம், கடன்சேவை கொடுப்பனவு வீதம்.
(5) தேசிய உற்பத்தி மட்டம், வேலைவாய்ப்பு மட்டம், காரணிச்சந்தை.

02. பின்வருமாறு உற்பத்திச் சாத்திய வளையி அமைந்து காணப்படுவதற்கான காரணமாக அமையக் கூடியது.




(1) தொழில் நுட்ப முன்னேற்றம்.
(2) இரு உற்பத்திகளிலும் திருத்தமான தொழில்நுட்பங்கள் பயன்படுத்தப்படல்.
(3) கணனி உற்பத்தியில் ஏற்பட்ட தொழில் நுட்ப முன்னேற்றம்.
(4) வெளிநாட்டு முதலீடுகளின் வருகை.
(5) நாட்டில் சமாதானம் நிலவுதல்.

03. மனிதத் தேவைகள் பற்றிய பின்வரும் கூற்றுகளுள் தவறானது.
(1) குறித்த நேரத்தில் மனித தேவைகள் வரையறுக்கப்பட்டவையாகும்.
(2) மனிதத் தேவைகளை பொருட்கள் சேவைகளால் மட்டுமே பூர்த்தி செய்ய முடியும் என்பது தவறாகும்.
(3) மனித தேவைகள் அதிகரித்துச் செல்வன.
(4) குறித்த கால அளவை எவ்வாறு வரையறுக்கிலும் மனிதத்தேவைகள் எண்ணற்றவையாக காணப்படும்.
(5) மனித தேவைகள் என்ற எண்ணக்கரு பல துறைகளுடன் தொடர்பான எண்ணக்கருவாகும்.

04. சந்தைப் பொருளாதாரமொன்றில் இலாபத்தின் பணி அல்லாதது
(1) புதிய கண்டுபிடிப்புகளுக்கான வெகுமதியாகக் காணப்படல்.
(2) பொருளாதார துறைகளிடையே வள ஒதுக்கீட்டுச் செயற்றிறனை அதிகரித்தல்.
(3) ஆபத்துக்களைத் தாங்குவதற்கான கொடுப்பனவுகளை வழங்கல்.
(4) இலாப அச்சம் காணப்படுதல்.
(5) நிச்சயமற்ற நன்மைகளை அறிய


05. பொருளியல் ரீதியாக சிந்தித்தல் என்பதன் பொருள்,
(1) அமையச் செலவின் அடிப்படையில் சிந்தித்தலாகும்.
(2) பொருளியல் அறிஞர்களின் கோட்பாடுகள் அடிப்படையில் சிந்தித்தலாகும்.
(3) எல்லை விளைவுகளையும் எல்லைச் செலவுகளையும் ஒப்பீடு செய்து தர்க்க ரீதியாக தீர்மானம் எடுக்கும் நடவடிக்கையாகும்.
(4) வேகமான பொருளாதார வளர்ச்சிக்கு அறிவினை எவ்வாறு பயன்படுத்தலாம் என்ற வகையில் சிந்தித்தலாகும்.
(5) மனித நல்வாழ்விற்கு ஒவ்வொரு மனிதனும் தன்னை எவ்வாறு வடிவமைத்துக்கொள்ள வேண்டுமென்று சிந்தித்தலாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

06. திட்டமிட்ட பொருளாதாரம் பற்றிய பின்வரும் கூற்றுக்களில் தவறானது.
(1) பொதுநலன் நோக்கை அடிப்படையாகக்கொண்டு திட்டமிடல் குழு செயற்படும்.
(2) இலாபத்தின் பங்கு சிறிதளவு காணப்படல்.
(3) திட்டமிட்ட பொருளாதார வளர்ச்சி.
(4) அரச அங்கீகாரத்தினூடாக, அதிகாரத்தினூடாக அரச பதவிகளினூடாக ஊக்குவிப்புக்கள் வழங்கப்படல்.
(5) இவை தந்தை நாடுகளாக காணப்படுதல்.

07. அரசாங்க உத்தரவாத விலையினை நடைமுறைப்படுத்துவதனைப் பின்வரும் வரைபடம் காட்டுகிறது. இதன்படி உற்பத்தியாளருக்கு நிரப்பு கொடுப்பனவொன்றைச் செய்ய அரசு தீர்மானித்துள்ளது. அதன் பொருட்டு அரசு ஏற்க வேண்டிய செலவு.
(1) ரூபா 200 ஆகும்.
(2) ரூபா 500 ஆகும்.
(3) ரூபா 120 ஆகும்.
(4) ரூபா 180 ஆகும்.
(5) ரூபா 40 ஆகும்.





08. குறிப்பிட்ட பண்டமொன்றின் கேள்வி, நிரம்பல் சமன்பாடுகள் வருமாறு,

$Q = 800 - 10P$ $\qquad$ $Q = 10P$

அரசு உற்பத்தியாளர்களுக்கு அலகுக்கான மானியமாக ரூபா 10 ஐ வழங்குகின்றது. எனின் புதிய சந்தைச் சமநிலை விலையிலுள்ள நுகர்வோர் மிகையினளவு,
(1) ரூபா 8, 000 (2) ரூபா 16, 000
(3) ரூபா 10, 125 (4) ரூபா 12, 000
(5) ரூபா 20, 250

09. குறித்த பண்டத்தின் மீது அரசு அலகு வரி விதிப்பினை மேற்கொள்வதைப் பின்வரும் வரிப்படம் காட்டுகிறது. இங்கு சமூகத்திற்கு ஏற்பட்ட நலன் இழப்பினைக் காட்டும் பிரதேசமாக அமைவது.
(1) A யும் B யும் ஆகும்.
(2) G யும் F யும் ஆகும்.
(3) E யும் F யும் ஆகும்.
(4) H யும் G யும் ஆகும்.
(5) D யும் I யும் ஆகும்.





10. அடித்தள விலையினை செயல்திறனுடையதாக மாற்றுவதற்கு எடுக்கக்கூடிய நடவடிக்கையல்லாதது.
(1) மிகை நிரம்பலை களஞ்சியப்படுத்தல்.
(2) இடையுற்பத்திகளை (by products) மேற்கொள்ளல்.
(3) கேள்வியை உயர்த்துவதல்.
(4) ஏற்றுமதி நடவடிக்கைகளில் ஈடுபடுதல்.
(5) அதிக முதலீடுகளை குறித்த பண்ட உற்பத்தியில் ஊக்குவித்தல்.


11. நிறைபோட்டி நிறுவமொன்றின் கேள்வி வளையி பூரண நெகிழ்வுள்ளது என்பதனால் சுட்டப்படுவது,
(1) நிறுவனம் எத்தகைய வெளியீட்டு மட்டத்தை மேற்கொள்கினும் உற்பத்திப் பொருளின் விலையில் அது எவ்வித தாக்கத்தையும் செலுத்தமாட்டாடா என்பதாகும்.
(2) நிலவுகின்ற விலையில் நிறுவனமானது எல்லையற்ற தொகையினை விற்க முடியும் என்பதாகும்.
(3) நிறுவனம் வேறுபட்ட உற்பத்தி மட்டங்களை மேற்கொள்ளும் போதும் அதனது மொத்த வருமானம் நிலையானதாக இருக்கும் என்பதாகும்.
(4) தொழிலில் ஒரு பகுதியாக நிறுவனம் அமைந்துள்ளது என்பதைக் காட்டும்.
(5) நிறுவனம் நீண்டகாலத்திற்கு தொழிலில் இருக்கும் என்பதேயாகும்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


12. குறித்த நாடுகளின் நிரம்பல் நெகிழ்ச்சிக் குணகம் ஒன்றை விட உயர்வானதாக காணப்படுகிறது. இதனைச் சரியாகக் காட்டும் வரை படம்.

(1)




(2)



(3)



(4)



(5)




13. தரப்பட்ட வரைபடமானது சந்தைக் கேள்வி நிரம்பல் நிலைமைகளைக் காட்டுகிறது. ON மட்டத்தில் விலையினை வைத்திருக்க விலை ஆதரவு திட்டத்தினை அரசு அமுல்படுத்துகிறது அரச செலவீடு,




(1) QTVS அளவினால் அதிகரிக்கும்.
(2) NTUP அளவினால் அதிகரிக்கும்.
(3) NTVO அளவினால் அதிகரிக்கும்.
(4) NQRP அளவினால் அதிகரிக்கும்.
(5) QTUR அளவினால் வீழ்ச்சியுறும்.

14. நிறுவனம் ஒன்றினது மூலதனம் மற்றும் ஊழியம் என்பவற்றை உள்ளடக்கிய அனைத்து உற்பத்திக் காரணிகளையும் அதிகளவில் வேலைக்கு ஈடுபடுத்தப்படும் போது அதனது சராசரி மொத்தச் செலவின் போக்கினை அருகிலுள்ள வரைபடம் காட்டுகிறது.

இந்நிறுவனமானது தனது வெளியீட்டை $Q_3$ இலிருந்து $Q_5$ ஆக உயர்த்தும் போது இங்கு நிகழ்வது,




(1) நீண்டகாலச் செயற்பாட்டைக் காட்டுகிறது.
(2) அதிகரித்த உற்பத்தி வினைத்திறனைக் காட்டுகிறது.
(3) சிறப்புத் தேர்ச்சியினால் ஏற்படும் நயப்பாடு ஏற்படுவதைக் காட்டுகிறது.
(4) அளவுத்திட்ட சிக்கனம் இன்மைகளைக் காட்டுகிறது.
(5) நிறுவனத்தின் நன்மை உச்சப்படுத்தப்படுவதைக் காட்டுகிறது.


15. குறித்த நாடு ஓரலகு குறித்த பண்டத்தினை ரூபா 100 படி கட்டின்றி இறக்குமதி செய்ய முடியும். குறித்த நாடு 20 சதவீத நாணய மாற்று விகித பெறுமதி இறக்கம் செய்யுமாயின் குறித்த பண்டத்தின் ஓரலகினை இறக்குமதி செய்வதற்கான செலவு (ஒரு ஐக்கிய அமெரிக்க டொலர் சமன் 100 ரூபா)

(1) 120 ரூபா (2) 140 ரூபா (3) 125 ரூபா (4) 80 ரூபா (5) 110 ரூபா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

16. பூரண போட்டித்தன்மை வாய்ந்த ஊழியச் சந்தையொன்றில் சந்தைச் சமநிலையை வரைபடம் காட்டுகிறது. சந்தை சமநிலையில் உள்ளபோது பொருளியல் வாடகையையும், மாற்றல் வருமானத்தையும் முறையே சரியாகக் காட்டும் தொகுதி,




(1) ABD, BCD
(2) BCD, CDEO
(3) ACD, CDEO
(4) CDEO, BCD
(5) ABD, BDEO

17. உற்பத்தியில் உள்ளார்ந்த செலவுகள் (Implicit Cost) காணப்படுமாயின்,
(1) பொருளியல் இலாபம் எப்போதும் பூச்சியமான இருக்கும்.
(2) பொருளியல் இலாபமும் கணக்கியல் இலாபமும் சமனாகும்.
(3) கணக்கியல் இலாபம் பொருளியல் இலாபத்தை விட உயர்வாக இருக்கும்.
(4) பொருளியல் இலாபம் கணக்கியல் இலாபத்தை விட உயர்வாக இருக்கும்.
(5) கணக்கியல் இலாபம் எப்போதும் பூச்சியமாக இருக்கும்.

18. இலங்கையில் தேசிய கணக்கீடு தொடர்பான பின்வரும் கூற்றுக்களில் நீர் உடன்படும் கூற்று,
(1) தேசிய உற்பத்தி, தேசிய வருமானம், தேசிய செலவீடு ஆகியனவற்றின் கணிப்பீட்டுப் பெறுமதி இலங்கையில் சமனாக காணப்படுகிறது.
(2) இரட்டை எண்ணல் தவறை நீக்க இருபக்க பாய்ச்சல் வருமானங்களை மட்டும் கவனத்தில் கொள்ளல், முடிவுப் பொருள் சேவைப் பெறுமதி முறை, ஊட்டிய பெறுமதி முறை என்பன இலங்கையில் கையாளப்படுகின்றன.
(3) இலங்கையில் உற்பத்திவழியிலும், செலவுவழியிலும் தேசிய கணக்கீடு மேற்கொள்ளப்படுகின்றது.
(4) உற்பத்தி வழியில் கணிப்பீட்டை மேற்கொள்ளும் போது ஏற்படுகின்ற பல் கணிப்பீட்டுத் தவறை நீக்க முடிவுப் பொருள் பெறுமதி முறை, ஊட்டிய பெறுமதி முறை என்பன கையாளப்படுகின்றன.
(5) நடைமுறை விலை மொத்தத் தேசிய உற்பத்தியை நிலையான விலை மொத்தத் தேசிய உற்பத்தியால் வகுத்து நூறால் பெருக்கி மொத்தத் தேசிய உற்பத்தி பெற்றுக்கொள்ளப்படும்.

19. எளிமையான பொருளாதாரமொன்றின் மொத்த சேமிப்புக் கோட்டின் சரிவு குறைவடைந்து செல்லுமாயின் அதன் பொருளாதார விளைவாக இருக்கக் கூடியது.
(1) பெருக்கியின் பெறுமதி குறைவடையும், சமநிலை வருமானம் அதிகரிக்கும்.
(2) பெருக்கியின் பெறுமதியும் குறைடையும், சமநிலை வருமானமும் குறைவடையும்.
(3) பெருக்கியின் பெறுமதி அதிகரிப்பதுடன் சமநிலை வருமானமும் அதிகரிக்கும்.
(4) பெருக்கியின் பெறுமதி அதிகரிப்பதுடன் சமநிலை வருமானமும் குறைவடையும்.
(5) பெருக்கியின் பெறுமதியில் மாற்றம் ஏற்படினும் சமநிலை வருமானத்தில் எவ்வித மாற்றமும் ஏற்படாது.

20. தேறிய தேசிய வருமானம் என்பது,
(1) மொத்த தேசிய வருமானத்திலிருந்து பெறுமானத்தேய்வை சீராக்கி பெற்றுக் கொள்ளப்படுவது.
(2) மொத்த தேசிய வருமானம் (நிலையான விலைகளில்) வர்த்தக மாற்று வீத விளைவுகள் என்பவற்றை சேர்த்து பெற்றுக்கொள்ளப்படுவது.
(3) மொத்த உள்நாட்டு வருமானத்துடன் தேசிய வெளிநாட்டு காரணி வருமானத்தை சேர்த்து பெற்றுக்கொள்ளப்படுவது.
(4) சந்தை விலையிலான மொத்த தேசிய வருமானத்துடன் மானியத்தைக் கூட்டி நேரில் வரிகளைக் கழித்து பெற்றுக்கொள்ளப்படுவது.
(5) தேசிய உற்பத்தியின் போதான சூழல் பாதிப்புக்களைக் கவனத்திற்கொண்டு பெற்றுக்கொள்ளப்படுவது.

21. திறந்த பொருளாதாரமொன்றின்,

| | | |
|---|---|---|
| சமநிலைத் தேசிய வருமானம் (Y) | = | ரூபா மில்லியன் 8, 000 |
| நுகர்வுச் செலவீடு (C) | = | ரூபா மில்லியன் 5, 800 |
| வரி அறவீடுகள் (T) | = | ரூபா மில்லியன் 900 |
| இறக்குமதிகள் (M) | = | ரூபா மில்லியன் 300 |
| அரசாங்கக் கொள்வனவுகள் (G) | = | ரூபா மில்லியன் 900 |
| முதலீட்டுச் செலவீடு | = | ரூபா மில்லியன் 1, 000 |

ஏற்றுமதிகளின் (X) பெறுமதி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(1) 1,500 மில்லியன் ரூபா (2) 6,800 மில்லியன் ரூபா
(3) 7,700 மில்லியன் ரூபா (4) 6,500 மில்லியன் ரூபா
(5) 1,000 மில்லியன் ரூபா

22. ஓர் எளிய பொருளாதாரத்தில் எல்லை சேமிப்பு நாட்டம் 0.4 ஆகும். தன்னிச்சையான முதலீடுகள் ரூபா 80 மில்லியனால் அதிகரித்தால் சமநிலை தேசிய வருமானம்.
(1) ரூபா 150 மில்லியனால் சுருக்கமடையும்.
(2) ரூபா 200 மில்லியனால் விரிவடையும்.
(3) ரூபா 160 மில்லியனால் சுருக்கமடையும்.
(4) ரூபா 180 மில்லியனால் விரிவடையும்.
(5) ரூபா 133.33 மில்லியனால் விரிவடையும்.

23. அரசாங்கத்துறை மற்றும் வெளிநாட்டுத்துறை என்பவற்றை உள்ளடக்காத பொருளாதாரமொன்றின் எல்லை நுகர்வு நாட்டம் 0.6 ஆகும். ரூபா பில்லியன் எனுமளவினால் அதிகரித்த முதலீட்டுச் செலவினது பெருக்கி விளைவின் மூன்றாவது சுற்றின் பெறுமதி.
(1) ரூபா 240 பில்லியன் (2) ரூபா 160 பில்லியன்
(3) ரூபா 96 பில்லியன் (4) ரூபா 144 பில்லியன்
(5) ரூபா 864 பில்லியன்

24. மூடப்பட்ட பொருளாதாரமொன்றில் தன்னிச்சையான வரி, அரசாங்க கொள்வனவுகள் என்பன 40 பில்லியன் ரூபாவினால் அதிகரிக்குமாயின் மொத்தச் சமநிலை வருமானம்,
(1) அதிகரிக்கும் (2) குறைவடையும்
(3) 40 பில்லியனால் அதிகரிக்கும் (4) 20 பில்லியனால் வீழ்ச்சியுறும்.
(5) மாறாதிருக்கும்.

25. அரசாங்கமும் வெளிநாட்டுத்துறையும் இல்லாத ஒரு எளிய பொருளாதார மாதிரியில் சேமிப்பு சார்பு $S = -200 + 0.2y$ ஆக காணப்படும் நிலையில் முதலீட்டு மட்டம் 500 மில்லியன் ரூபாவினால் அதிகரிக்குமாயின் நுகர்வு எவ்வளவால் உயர்வடையும்?
(1) 1000 (2) 1200 (3) 800 (4) 1800 (5) 2000

26. மொத்தத் தேசிய உற்பத்திச் சுருக்கியை சரியாகக் காட்டுவது.

(1) $\dfrac{\text{நடைமுறை விலைகளில் கணிக்கப்பட்ட மொத்தத் தேசிய உற்பத்தி}}{\text{நிலையான விலைகளில் கணிக்கப்பட்ட மொத்தத் தேசிய உற்பத்தி}} \times 100$

(2) $\dfrac{\text{நடைமுறை விலைகளில் கணிக்கப்பட்ட மொத்தத் உள்நாட்டு உற்பத்தி}}{\text{நிலையான விலைகளில் கணிக்கப்பட்ட மொத்தத் உள்நாட்டு உற்பத்தி}}$

(3) $\dfrac{\text{நடைமுறை விலைகளில் கணிக்கப்பட்ட மொத்தத் தேசிய உற்பத்தி}}{\text{கொழும்பு பெரும்பாக நுகர்வோர் விலைச் சுட்டெண்}} \times 100$

(4) $\dfrac{\text{நிலையான விலைகளில் கணிக்கப்பட்ட மொத்தத் தேசிய உற்பத்தி}}{\text{நடைமுறை விலைகளில் கணிக்கப்பட்ட மொத்தத் தேசிய உற்பத்தி}} \times 100$

(5) $\dfrac{\text{நிலையான விலைகளில் கணிக்கப்பட்ட மொத்த உள்நாட்டு உற்பத்தி}}{\text{நடைமுறை விலைகளில் கணிக்கப்பட்ட மொத்த உள்நாட்டு உற்பத்தி}} \times 100$



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

27. குறித்த நாடொன்றின் வணிக வங்கிக் கட்டமைப்பின் ஐந்தொகையின் சாராம்சம் பின்வருமாறு தரப்படுகிறது.

| பொறுப்புக்கள் (ரூபா மில்லியன்) | | சொத்துக்கள் (ரூபா மில்லியன்) | |
|---|---|---|---|
| வைப்புக்கள் | 1000 | ஒதுக்குப் பணம் | 1000 |
| | | கடன்கள் | 850 |
| மொத்தம் | 1000 | மொத்தம் | 1000 |

நியதி காசு ஒதுக்குத் தேவை 10% ஆயின் வங்கிக் கட்டமைப்பிலுள்ள மிகை ஒதுக்குகளை கடன் வழங்குவதன் மூலம் புதிதாக உயர்த்தப்படக்கூடிய வைப்புகளின் அளவு,

(1) ரூ. 900 மில்லியன்
(2) ரூ. 50 மில்லியன்
(3) ரூ. 9000 மில்லியன்
(4) ரூ. 1500 மில்லியன்
(5) ரூ. 500 மில்லியன்

28. பணத்திற்கான கேள்வி வளையி மேலிருந்து கீழாக இடமிருந்து வலமாக சரித்து செல்லக் காரணம்,
(1) பணக்கேள்வி பணப்புழக்க சுற்றோட்ட வேகத்துடன் எதிர்க்கணியத் தொடர்பை கொண்டிருப்பதனாலாகும்.
(2) பரிமாற்று நோக்கத்துக்காக கேள்வி எழுப்பப்படுவதாலாகும்.
(3) பாதுகாப்பு நோக்கத்துக்காக பணக்கேள்வி எழுப்பப்படுவதாலாகும்.
(4) ஊக நோக்கத்திற்காக பணக்கேள்வி எழுப்பப்படுவதலாகும்.
(5) பணம் பூரண திரவத் தன்மையைக் கொண்டிருப்பதனாலாகும்.

29. இலங்கையின் பணக்கூட்டுக்கள் தொடர்பான பின்வரும் தரவுகள் உமக்குத் தரப்பட்டுள்ளன.

| | ரூபா மில்லியன் |
|---|---|
| அடிப்படைப் பணம் | 900 |
| வணிக வங்கிகளிடமுள்ள புழக்கப் பணம் | 240 |
| மத்திய வங்கியிலுள்ள வணிக வங்கி வைப்புக்கள் | 90 |
| வணிக வங்கிகளிலுள்ள பொதுமக்களின் கேள்வி வைப்புக்கள் | 360 |
| வணிக வங்கிகளிலுள்ள பொதுமக்களின் தவணை மற்றும் சேமிப்பு வைப்புக்கள் | 1200 |

மேற்படி தரவுகளின் அடிப்படையில் பொருளாதாரத்தின் குறுகிய பணநிரம்பல் ($M_1$) மற்றும் விரிந்த பணநிரம்பல் ($M_2$) என்பன முறையே,

(1) $M_2 = 1020, M_2 = 2220$
(2) $M_1 = 450, M_2 = 1650$
(3) $M_1 = 1260, M_2 = 2460$
(4) $M_1 = 1170, M_2 = 1530$
(5) $M_1 = 930, M_2 = 2130$

30. பணத்தின் சுழற்சி வேகத்தை (velocity of money) சரியாக வரைவிலக்கணப்படுத்தும் கூற்று.
(1) பணநிரம்பலுக்கும் பணவீக்கத்துக்குமிடையிலான நேர்க்கணியத் தொடர்பு உண்டு என்பதைக் காட்டுவதாகும்.
(2) குறித்த நாட்டின் ஓரலகு நாணயத்தினைக் கொண்டு கொள்வனவு செய்யக்கூடிய பிறிதொரு நாட்டு நாணயத்தின் அளவைக் கூறுவதாகும்.
(3) குறித்த நாட்டு நாணயத்தின் சர்வதேச சந்தையில் அதன் பங்கை எடுத்துக் கூறுவதாகும்.
(4) குறித்த கால இடைவெளியில் ஓர் அலகுப் பணம் எத்தனை தடவைகள் முடிவுப் பொருட்கள் சேவைகள் மீது செலவிடப்பட்டது என்பதை எடுத்துக் கூறுவதாகும்.
(5) பணத்தின் கொள்வனவாற்றலை எடுத்துக் கூறுவதாகும்.

31. அரசாங்கத் தோல்வி ஏற்பட காரணமாய் அமையாதது.
(1) அரசின் அதிகரித்த பொருளாதார ஆதிக்கமும், நுகர்வோர் இறைமை பாதிப்பும்.
(2) தனியார் ஊக்குவிப்பின்மையும் உற்பத்தித் திறன் போதாமையும்.
(3) மக்கள் தமது உழைப்பை தொடர்ந்து பங்கிட விரும்பாமையும் நவீனத்துவம் இன்மையும்.
(4) சந்தைத் தோல்வியை தடுப்பதற்காக பொருளாதாரத்தில் அரசு தலையிட்ட போதும் அரசாங்கத்தில் காணப்படும் இலஞ்சம், ஊழல், காலதாமதம், விரயம் போன்றவற்றால் தனது இலக்கை அரசு அடைய முடியாது இருத்தல்.
(5) வெளிவாரி விளைவுகளை ஒழுங்குபடுத்துவதற்காக அரச தலையீடு

32. சந்தைத் தோல்வி ஏற்பட ஒரு காரணமாக அமையாதது,
(1) பொதுப்பண்டங்கள் காணப்படல்.
(2) நலன்புரி பண்டங்கள் காணப்படல்.
(3) அளவுத்திட்ட சிக்கனமின்மைகள் ஏற்படல்
(4) வெளிவாரி விளைவுகள் காணப்படும்.
(5) தனியுரிமைகள் காணப்படுதல்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

33. வெளிவாரி விளைவுகள் பற்றிய பின்வரும் கூற்றுக்களில் தவறான கூற்று,
(1) விலைப்பொறிமுறை இவற்றை அடையாளப்படுத்துவதில்லை.
(2) இவை பூச்சியமாக அமையும் போது விலைப் பொறிமுறையால் இடம்பெறும் வள ஒதுக்கீடு மட்டமும் சமூக திறன் வாய்ந்த வள ஒதுக்கீட்டு மட்டமும் சமனாக அமையாது.
(3) இவை சந்தைக்கு வெளியே இடம்பெறுகின்றன.
(4) இவற்றுக்கு உட்படுவோர் எவ்வித கட்டணத்தையும் செலுத்துவதில்லை.
(5) இவற்றை சீர்செய்ய பொருளாதாரத்தில் அரச தலையீடு அவசியமாகின்றது.

34. போலிப் பொதுப் பொருளுக்கு உதாரணமாக அமைவது.
(1) அரச அருங்காட்சியகம் (2) தேசிய பாதுகாப்பு
(3) பெருவீதி அமைப்புக்கள் (4) சூழல் பாதுகாப்பு (5) வெளிச்ச வீடு

35. விரிவாக்க இறைக்கொள்கையினை உள்ளடக்கிய செயற்பாட்டைத் தெரிவு செய்க.
(1) அரச செலவீனத்தைக் குறைத்தலும் வரிகளை அதிகரித்தலும்.
(2) அரச செலவீனத்தை உயர்த்தலும் வரிகளைக் குறைத்தலும்.
(3) பாதீட்டு மிகையினை உருவாக்கல்.
(4) வட்டி வீதத்தைக் குறைத்தலும் வரிகளை அதிகரித்தலும்.
(5) பாதீட்டுப் பற்றாக்குறைக்கான வங்கிக் கடன்களை குறைத்துக் கொள்ளல்.

36. இலங்கை, சீனா ஆகிய இரு நாடுகளினதும் உற்பத்தி சாத்திய வளையிகளை வரைபடம் காட்டுகிறது, எவ்விதமான வர்த்தகத் தடைகளும் இல்லையெனின்,





(1) இரு உற்பத்திகளிலும் சீனாவிற்கு ஒப்பீட்டு நயம் உள்ளது.
(2) சீனா தேயிலையை இலங்கைக்கு ஏற்றுமதி செய்யும்.
(3) வர்த்தகத்தின் மூலம் இரு நாடுகளும் நன்மை பெற முடியாது.
(4) இலங்கை ஆடையை சீனாவிற்கு ஏற்றுமதி செய்யும்.
(5) வர்த்தக்கத்தின் மூலம் இரு நாடுகளும் நன்மைகளை அடையும்.

37. குறித்த நாட்டின் வர்த்தக மாற்று விகிதம் 60 ஆக இருந்தது. அடியாண்டுடன் ஒப்பிடுகையில் குறித்த ஆண்டில் இறக்குமதி விலைச்சுட்டெண் 100% இனால் அதிகரித்துள்ளதெனின் அவ்வாண்டின் ஏற்றுமதி விலைச்சுட்டெண்.
(1) 160 ஆகும் (2) 120 ஆகும் (3) 200 ஆகும் (4) 180 ஆகும் (5) 240 ஆகும்

38. இறக்குமதி செய்யப்படும் மூலப் பொருட்களின் கிரயத்திலும் கூலியிலும் ஏற்படும் அதிகரிப்பும் எதற்கு இட்டுச் செல்லும்,
(1) கேள்வித்தூண்டல் பணவீக்கம் (2) நாணய மாற்றுவீத வீழ்ச்சி
(3) கிரய தள்ளுகைப் பணவீக்கம் (4) சென்மதி நிலுவைப் பற்றாக்குறை
(5) ஏற்றுமதிப் பொருட்களின் விலையதிகரிப்பு

39. இரு நாடுகள் தமது வளங்களை முழுதாகவும் வினைத்திறனுடனுன் பயன்படுத்திப் பெறக் கூடிய இரு உற்பத்திகளினதும் சாத்தியங்களை கீழ்வரும் வரிப்படம் காட்டுகிறது.




இதன்படி இரு நாடுகளின் சர்வதேச வர்த்தகம் பற்றிக் கூறக்கூடியது.
(1) தனிநயத்தின் அடிப்படையில் செயற்படின் நாடுகள் நன்மை அடையக்கூடிய வர்த்தக சாத்தியங்கள் உள்ளன.
(2) ஒப்பீடு நயத்தின் அடிப்படையில் நாடுகள் செயற்படமுடியும்.
(3) இரு நாடுகளும் நன்மை அடையக்கூடிய சாத்தியங்கள் ஒப்பீட்டு நன்மையிலும் காணப்படவில்லை.
(4) தனிநயம், ஒப்பீட்டு நயம் என்வற்றின் மூலம் நன்மைகளை உயர்த்த முடிதல்.
(5) தனிநயத்தை விட ஒப்பீடு நயத்தில் செயற்பட்டு நாடுகள் அதிக நன்மைகளை அனுபவிக்க முடியும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

40. சுதந்திரமான மிதக்கும் நாணயமாற்று வீத முறையில்,
(1) சென்மதி நிலுவை எப்போதும் சமநிலையில் இருக்கும்.
(2) நாணயத்தின் வெளிநாட்டுப் பெறுமதியானது அதிக தளம்பலற்றதாகவும் தொடர்ந்து அதிகரிப்பதாகவும் இருக்கும்.
(3) சென்மதி நிலுவை பிரச்சனை தன்னிச்சையாக தீர்க்கும் வழிமுறையாக அமைந்திருக்கும்.
(4) அரச தலையீடுகள் குறைந்ததாகவும் நாணயத்தின் வெளிநாட்டுப் பெறுமதி உயர்ந்ததாகவும் அமைந்திருக்கும்.
(5) சென்மதி நிலுவையானது எப்போதும் அரச பாதீட்டிற்குச் சமமானதாக அமைந்திருக்கும்.

41. கீழ்வரும் கூற்றுக்களில் இலங்கையின் வர்த்தக மாற்று விகிதத்தில் ஒரு சாதகமான போக்கு ஏற்படக் காரணமாக அமையக்கூடியது என நீர் எதனைக் கருதுகிறீர்?
(1) இலங்கையின் ஏற்றுமதி வருவாய்கள் அதிகரித்தல்.
(2) இலங்கை நாணயத்தின் பெறுமதி வெளிநாட்டு நாணயத்திற்கு எதிராக தேய்வடைதல்.
(3) இலங்கையின் வர்த்தக நிலுவையில் ஒரு மிகைநிலை ஏற்படல்.
(4) இலங்கையின் இறக்குமதிச் செலவுகள் வீழ்ச்சியடைதல்.
(5) இலங்கையின் ஏற்றுமதிப் பொருட்களுக்குச் சார்பாக இலங்கையின் இறக்குமதிப் பொருட்களின் விலைகளில் ஏற்படும் வீழ்ச்சி.

42. வருமான மீள் பங்கீட்டில் அரசு தலையிடுவதற்கான காரணம் அல்லாதது.
(1) சமூக நீதியை ஏற்படுத்த
(2) துரித பொருளாதார வளர்ச்சியை ஏற்படுத்த
(3) சார்பு வறுமையைக் குறைக்க.
(4) ஒப்பரவுடன் கூடிய பொருளாதார வளர்ச்சியை ஏற்படுத்த,
(5) அரச பொருளாதாரக் கொள்கைகளை வகுத்தலும், நடைமுறைப்படுத்தலும் அதனை செயற்றிறன்மிக்கதாக மாற்றுதலுக்கும்.

43. நாடு சர்வதேச வர்த்தகத்தில் தங்கியிருதுக்கும் வீதத்தைச் சரியாக வரைவிலக்கணப்படுத்துவது
(1) ஏற்றுமதியின் இறக்குமதி ஆற்றலாகும்.
(2) ஏற்றுமதி வருமானத்தைக்கொண்டு எவ்வளவு இறக்குமதிச் செலவை ஈடுசெய்யலாம் என்பதைக் கூறுவது.
(3) குறித்த நாட்டின் ஏற்றுமதி மற்றும் இறக்குமதி என்பவற்றின் பெறுமதியை மொத்த உள்நாட்டு உற்பத்தியில் அளவீட்டுக் கூறுவது,
(4) சென்மதி நிலுவையின் திரண்ட மீதியாகும்.
(5) குறித்த நாட்டின் ஏற்றுமதியின் சர்வதேசப்பங்கை அளவீட்டுக் கூறுவது.

44. பொருளாதாரமொன்றின் சாத்தியவள வெளியீட்டை அதிகரிக்க ஏதுவாக அமையக்கூடிய காரணம் அல்லாதது,
(1) பௌதீக மூலதனத்தின் அளவை உயர்த்துதல்.
(2) புதிய கண்டுபிடிப்புக்கள், தொழில்நுட்பங்கள், புத்தாக்கங்கள் என்பவற்றை ஊக்குவித்தலும் பிரயோகித்தலும்.
(3) மனித மூலதனத்தை விருத்தி செய்தல்.
(4) சமூக முதலை உயர்ந்த மட்டத்தில் பேணுதல்.
(5) பொதுவிலை மட்டத்தை குறைவடையச் செய்தல்.

45. இயற்கை வேலையின்மையின் இரு உள்ளடக்கங்கள்.
(1) கிராமிய வேலையின்மையும், பெருந்தோட்ட வேலையின்மையும்.
(2) விவசாயத்துறை வேலையின்மையும், முறைசாரா அமைப்புகளிலுள்ள வேலையின்மையும்.
(3) வெளிப்படையான வேலையின்மையும், மறைமுக வேலையின்மையும்
(4) உராய்வு வேலையின்மையும், அமைப்பு சார் வேலையின்மையும்.
(5) சமுதாய வேலையின்மையும், அமைப்பு சார் வேலையின்மையும்.

46. இலங்கையினுடைய பொருளாதார இலக்காக அமைவது.
(1) சமத்துவத் திறன் கூடிய துரித பொருளாதார வளர்ச்சியை ஏற்படுத்துவது.
(2) ஆசியாவின் அதிசயாக இலங்கையை மாற்றல்.
(3) சவால்களை எதிர்நோக்கும் சமூகத்தை உருவாக்குதல்.
(4) அறிவுப் பொருளாதாரமாக மாறுதல்.
(5) பேண்தகு அபிவிருத்தியை அடைதல்.

47. சர்வதேச வர்த்தகத்தில் இலங்கை தங்கியிருக்கும் வீதத்தைச் சரியாக காட்டுவது.
(1) 28% (2) 40% (3) 69% (4) 79% (5) 59%



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

48. பச்சைப்புரட்சி, வெள்ளைப்புரட்சி, நீலப்புரட்சி என்பதனூடாக வெளிப்படுத்தப்படும் பொருளியல் கருத்துக்களை சரியாகக் கொண்ட தொகுதி,

(1) விவசாய நடவடிக்கைகளை முனைப்பாக முன்னெடுத்தல், அமைதி நடவடிக்கைகளை முனைப்பாக முன்னேடுத்தல், கடல் பாதுகாப்பு நடவடிக்கைகளை முனைப்பாக முன்னேடுத்தல்.

(2) விவசாயத்தில் துரித முன்னேற்றமடைதல், நல்லாட்சிப் பண்புகளில் மேலோங்கல் நாட்டின் இறைமையை அந்நிய அழுத்தங்களில் இருந்து விடுவித்தல்.

(3) உணவில் தன்னறிவு அடைதல், கால்நடை வளர்ப்பில் அடைதல், கடல் வளத்தில் (உணவில்) அடைதல்.

(4) விவசாயத்துறையில் துரித முன்னேற்றத்தை ஏற்படுத்தல், அரசியல் துறையில் துரித முன்னேற்றத்தை ஏற்படுத்தல், ஜனநாயக ஆட்சித்துறையில் துரித முன்னேற்றத்தை ஏற்படுத்தல்.

(5) பொருளாதார வளர்ச்0சியை ஏற்படுத்தல், நல்லாட்சிப் பண்புகளை மேலோங்கச் செய்தல், நாட்டின் இறைமையை அந்நிய சக்திகளிடம் இருந்து பாதுகாத்தல்.

49. கடன் தரமிடல் பற்றிய பின்வரும் கூற்றுக்களில் தவறானது,

(1) கடன் பெற்றுக் கொள்வதற்கான தகுதியினை இது மதிப்பீடு செய்வதாக அமைகிறது.

(2) கடனினைப் பெறும் போது மீளச் செலுத்துவதற்குரிய சாத்தியங்கள் கடன் உரிமை என்பவற்றை அறிந்துகொள்ள.

(3) தனிநபர், கம்பனி, நாடு என்பவற்றின் கடன்பெறு தகுதியை மதிப்பீடு செய்கின்றது.

(4) கடன் தரமிடலுக்கான பொதுவான அளவு கருவிகள் பல உள.

(5) கடன் தரமிடல் அடிப்படையில் தகுதியற்ற நிலை ஏற்படுமாயின் கடன் பெற முடியாது.

50. 2010 ஆம் ஆண்டில் இலங்கையின் சந்தை விலைகளிலான தலைக்குரிய மொத்தத் தேசிய உற்பத்தியை ஐக்கிய அமெரிக்க டொலர்களில் குறிப்பிட்டால்.

(1) 2368 ஐக்கிய அமெரிக்க டொலர்.

(2) 1880 ஐக்கிய அமெரிக்க டொலர்.

(3) 2033 ஐக்கிய அமெரிக்க டொலர்.

(4) 2720 ஐக்கிய அமெரிக்க டொலர்.

(5) 1640 ஐக்கிய அமெரிக்க டொலர்.


*புதிய பாடத்திற்கேற்ப 2011இல் இருந்து பரீட்சைக்கு தோற்றுவோர்க்கான*

**ஆசிரியரின் நூல்கள்**

- பொருளாதாரமொன்றின் அறிமுகம் (2ம் பதிப்பு)
- உற்பத்திச் சாத்திய வளையி
- கேள்விக்கோட்பாடு நிரம்பல்கோட்பாடு சந்தைச் சமநிலை
- பொருளியல் பரீட்சை வழிகாட்டி
- பொருளாதார கொள்கை, வேலையின்மை
- பொருளாதார வளர்ச்சி, வறுமை, அபிவிருத்தி, நடைமுறை விடயங்கள்
- சனத்தொகை
- பொருளியல் மாதிரி வினாத்தாள் (மிக விரிவான விடைகளுடன்)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| ආර්ථික විද්‍යාව II<br>பொருளியல் II<br>**Economics II** | **21 T II** | පැය තුනයි<br>மூன்று மணித்தியாலம்<br>*Three hours* |

அறிவுறுத்தல்கள் :
* ஐந்து வினாக்களுக்கு மாத்திரம் விடை எழுதுக.
* உபபிரிவு 'அ' உபபிரிவு 'ஆ' ஆகியவற்றிலிருந்து இரண்டு வினாக்களை தெரிவு செய்து எல்லாமாக நான்கு வினாக்களுக்கு விடை எழுதுக.
* வரைபு தாள்கள் வழங்கப்படும்.

## உப பிரிவு 'அ'

(இப்பிரிவிலிருந்து இரண்டு வினாக்களைத் தெரிவு செய்க)

01. (i) எல்லா சமூகங்களும் எதிர்நோக்கும் அடிப்படைப் பொருளாதாரப் பிரச்சினைகள் எவை? இவை தவிர்ந்த நாடு எதிர்நோக்கும் வேறு அடிப்படைப் பிரச்சினைகள் யாவை?
   (ii) அடிப்படைப் பொருளாதார பிரச்சினைகளின் தோற்றத்திற்கான காரணிகளாக நீர் எவற்றைக் கருதுகின்றீர்?
   (iii) "உலகில் எவ்வாறு பல்வேறு பொருளாதார முறைமைகள் தோன்றின" என்பதைக் குறிப்பிடுக.
   (iv) பொருளாதார அமைப்பொன்றில் தீர்மானம் எடுக்கும் குழுக்கள் இரண்டைத் தருக?
   (v) பொருளியல் பேசப்படும் இருபெரும் சந்தைகள் எவை? அவற்றிற்கிடையில் நீர் காணும் வேறுபாடு யாது?
   (vi) அரசாங்கத் தோல்வி என்றால் என்ன? அரசாங்கத் தோல்வி ஏற்படுவதற்கான மூன்று காரணங்களை தருக?

02. (i) மனித தேவைகள், விருப்பங்கள், கொள்வனவு ஆற்றல், கேள்வி என்பவற்றிக்கிடையில் நீர் காணும் தொடர்பு யாது?
   (ii) தனிநபர் கேள்வி சார்பு, சந்தைக் கேள்விச் சார்பு என்பவற்றை வேறுபடுத்துக.
   (iii) கேள்விவிதி என்பதனால் கருதப்படுவது யாது? இவ்விதிக்கு முரணாகக் கேள்வி எழுகின்ற சந்தர்ப்பங்கள் இரண்டைகள் குறிப்பிடுக.
   (iv) கேள்விவிதி தொழிற்படக் காரணமாக ஒப்பீட்டு விளைவு பற்றிக் குறிப்பிடுக.
   (v) பின்வருவன ஒவ்வொன்றிற்கும் உதாரணம் தருக.

   அ) பிரதியீட்டுப் பண்டம்
   ஆ) போட்டி நிரம்பல் பண்டம்
   இ) நிரப்புப் பண்டம்
   ஈ) கூட்டு நிரம்பல் பண்டம்
   உ) குறை நிரப்புப் பண்டம்

03. குறிப்பிட்ட பண்டமொன்றி கேள்வி, நிரம்பற் சமன்பாடுகள் கீழே தரப்பட்டுள்ளது.
   $Qd = 600 - 10P$
   $Qs = 10P$ ஆகும்
   (i) பண்டத்தின் சமநிலை விலையையும், சமநிலை தொகையையும் காண்க.
   (ii) பண்டத்திற்கு அலகொன்றுக்காக 10 ரூபா மானியமொன்று வழங்கிய பின்னரான நிரம்பல் சமன்பாட்டினைக் கணிக்க
   (iii) மானியத்திற்குப் பின்னரான சமநிலை விலையையும், தொகையையும் கணிக்க.
   (iv) மானியத்திற்குப் பின்னர் நுகர்வோன் செலுத்தும் விலையும் உற்பத்தியாளன் பெறும் விலையும் எவ்வளவாக இருக்கும்?
   (v) நுகர்வோன் மற்றும் உற்பத்தியாளன் மிகை அதிகரிக்கும் அளவு யாது?
   (vi) மானியத்தின் காரணமாக அரசுக்கு ஏற்பட்ட செலவின் அளவு யாது?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

04. (i) தேசிய வருமானம், தனிநபர் வருமானம் என்பவற்றை மாதிரித் தரவுகளுடன் அட்டவணை வடிவில் காட்டுக.

(ii) தேசிய கணக்கீட்டில் உள்ள குறைபாடுகள் மூன்றைக் குறிப்பிடுக.

(iii) ஒரு நாடு தனது தேசிய வருமானத்தை விட உயர்வாக செலவீட்டை மேற்கொள்கின்றது எனின் அந்நாட்டின் வர்த்தக நிலுவை எவ்வாறு அமைந்திருக்கிறது?

(iv) திறந்த பொருளாதார மாதிரியில் சமநிலைக்கான நிபந்தனைகளை வழமையான குறியீடுகளுடன் தருக.

(v) நுகர்வுச் சார்ப்பிலிருந்து சேமிப்புச் சார்பைப் பெறும் முறையினைக் குறிப்பிடுக.

(vi) எளிய பொருளாதாரமொன்றின் மொத்த நுகர்வுச் சார்பு $C = 400 + 0.75\ Y$ ஆக அமைந்துள்ளது.

அ. மொத்தச் சேமிப்புச் சார்பைத் தருக.

ஆ. எந்த வருமான மட்டத்தில் சேமிப்பு பூச்சியமாகும்.

இ. இங்கு முதலீடு 30 மில்லியன் ரூபா அரசாங்க செலவு 50 மில்லியன் ரூபா, அரசாங்க வரி வருமானம் 20 மில்லியன் ரூபாவகவும் காணப்படுமாயின் பேரினப் பொருளாதார சமநிலை வருமானத்தைத் துணிக.

05. (i) பின்வரும் தரவுகள் பேரினப் பொருளாதாரமொன்றிற்கு உரியதாகும். (பெறுமதிகள் பில்லியன் ரூபாவில் தரப்பட்டுள்ளன)

$C = 400 + 0.8yd$

$I = 80$

$G = 400$

$T = 220$

இதில் C= நுகர்வு, I= முதலீடு, G= அரசாங்க செலவீடுகள், T= வரிகள் மேலே தரப்பட்டுள்ள தகவல்களைப் பயன்படுத்தி பின்வரும் வினாக்களுக்கு விடை தருக.

அ) சமனிலை தேசிய வருமான மட்டத்தைக் கணிக்க.

ஆ) முதலீடு ரூபா 20 மில்லியனால் அதிகரிக்குமாயின் சமநிலை தேசிய வருமானத்திற்கு யாது நிகழும்?

இ) பொருளாதாரத்தில் நிறைதொழில் தேசிய வருமான மட்டம் 4000 பில்லியன் ஆக இருப்பதற்கு அப்பொருளாதாரத்தில் முதலீடானது எவ்வளவாக அமைய வேண்டும்?

(ii) மொத்தக் கேள்வியை வரைவிலக்கணப்படுத்தி அது எவ்வாறு வருமான மட்டத்தை நிர்ணயிக்கிறது என்பதை விளக்குக.

(iii) ஒரு பொருளாதாரத்தில் சேமிப்பு, முதலீடு என்பவற்றில் ஏற்படுகின்ற மாற்றங்கள் அப்பொருளாதார நடவடிக்கைகளின் மட்டத்தில் எவ்வாறு தாக்கத்தை உண்டு பண்ணுகிறது என்பதை விவரிக்குக.

(iv) திறந்த மாதிரியில் சமநிலை தேசிய வருமானத்தை கூறுவதற்கு இரண்டு வழிமுறைகள் உள்ளன. அவற்றை அவற்றின் வழமையான குறியீடுகளுடன் தருக.

## உப பிரிவு ‘ஆ’
### (இப்பிரிவிலிருந்து இரண்டு வினாக்களைத் தெரிவு செய்க)

06. (i) அரசாங்கத் தோல்வி என்பதனால் கருதப்படுவது யாது?

(ii) அ) அரசுடமை தொழில் முயற்சிகள் என்பதனால் சுட்டப்படுவது என்ன? இலங்கையில் இவ்வாறான முயற்சிகளுக்கு இரு உதாரணம் தருக.

ஆ) அரசுடமை தொழில் முயற்சிகளின் செயலாற்றம் மிகக் குறைந்த மட்டத்திலேயே இருக்கின்றது இதற்கான இரு காரணங்களையும் இதன் விளைவுகளாக அமையக்கூடியவை இரண்டைக் குறிப்பிடுக.

(iii) பொருளாதார சமத்துவமின்மையால் தோற்றக்கூடிய சந்தைத் தோல்வியைச் சீர்ப்படுத்த அரசு எடுக்கக்கூடிய நடவடிக்கைகள் இரண்டைக் குறிப்பிடுக.

(iv) உற்பத்தியாளர்களுக்கு மானியம் வழங்குவதற்குச் சார்பாக இரு கருத்துக்களையும் எதிரான கருத்துக்களையும் குறிப்பிடுக.

(v) இலங்கையில் வரி வருமானத்தை மொத்த உள்நாட்டு உற்பத்தியில் நோக்கினால் மிகவும் குறைந்த மட்டத்திலேயே இருக்கின்றது. இதற்கான காரணங்கள் யாது?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

07. (i) இலங்கையில் கணிப்பிடப்படும் பண நிரம்பலின் வகைகளைத் தருக.

(ii) பணவீக்கம், மையப்பணவீக்கம், ஆகிய எண்ணக்கருக்களின் பொருளைத் தெளிபடுத்துக.

(iii) நாணயக் கொள்கை என்பதனால் கருதப்படுவது யாது?

(iv) பணவீக்கத்தினைக் கட்டுப்படுத்த நாணயக்கொள்கையையும் இறைக்கொள்கையும் பயன்படுத்துவதில் எதிர்நோக்கப்படும் பிரச்சினைகளாக இருக்ககூடியவை யாவை?

(v) மத்திய வங்கியின் நேர்மாற்று மீள்கொள்வனவு நடவடிக்கைகள் (Reverse repurchase) அழைப்புக்கடன் சந்தை வட்டி வீதங்களில் ஏற்படுத்தும் பாதிப்புக்களைத் தருக?

(vi) வங்கிகளின் கம்பனி ஆளுகை என்பதன் பொருள் யாது? வங்கிகளில் கம்பனி ஆளுகைக்கான தேவையின் முக்கியத்துவம் யாது?

(vii) பணப்பெருக்கி, நாணயத்தளம், மொத்தத் தேசிய உற்பத்திச் சுருக்கி என்பவற்றைக் கணிப்பதற்கான சமன்பாடுகளைத் தருக.

08. (i) அ. இலங்கையில் பணவீக்கத்தை அளக்கப் பயன்படுத்தப்படும் அளவைகள் எவை?

ஆ. சுற்றோட்டத்தில் உள்ள நாணய அதிகரிப்பில் செல்வாக்குச் செலுத்தும் இரு பிரதான காரணிகள் எவை?

இ. பணவீக்கத்தை ஆய்வு செய்யும் அணுமுறைகள் யாவை?

(ii) பணவீக்கமானது பேரின பொருளாதார மாறிகளைத் தாக்கும் விதத்தை விளக்குக.

(iii) பணக்கொள்கை என்றால் என்ன? அதன் நோக்கங்களாக எவை அமைகின்றன?

(iv) வணிகவங்களின் கடனாக்கம் என்பதனால் கருதப்படுவது யாது? இக் கடனாக்கத்தினை மட்டுறு (வரையறை) செய்யும் காரணிகளைத் தருக.

(v) நிதியமைப்பின் நிறைபேறான தன்மை முக்கியத்துவம் பெறுவதற்கான காரணங்களைக் குறிப்பிடுக.

(vi) ஒரு நாட்டின் உள்வாரியான உறுதிப்பாட்டினை ஏற்படுத்தும் நோக்கிலான கொள்கைத் திட்டமிடலின் போது கவனத்தில் எடுக்கவேண்டிய விடயங்கள் யாவை?

09. (i) சர்வதேச வர்த்தகத்தினால் கிடைக்கும் பிரதான நன்மைகளைக் குறிப்பிடுக.

(ii) சுதந்திர வர்த்தகம் என்பதன் பொருள் யாது? சுதந்திர வர்த்தகத்திற்கு தடையாக அமையக்கூடிய நான்கு காரணிகளைக் குறிப்பிடுக.

(iii) "சர்வதேச வர்த்தம் தொடர்பான ஒப்பீட்டு அனுகூல கோட்பாட்டின் அடிப்படையில் நாடுகள் செயற்பட்டால் அவற்றின் நுகர்வு மட்டமும் உயரும்" இதனை விளக்கி இங்கு ஏதேனும் வரையறை காணப்படின் அதனைக் குறிப்பிடுக.

(iv) சென்மதி நிலுவை சமநிலையின்மை என்பதன் பொருள் யாது? சென்மதி நிலுவை சமநிலையின்மை நிலவக்கூடிய இரு நிலமைகளிலும் பொருளாதாரத்திற்கு ஏற்படக்கூடிய விளைவுகளை குறிப்பிடுக.

(v) சென்மதி நிலுவை நிதியீட்டத்திற்கு கையாளப்படும் முறைகள் யாவை?

(vi) பொருளாதார ஒழுங்கிணைப்பு என்பதன் பொருள் யாது? அதன் பல்வேறு கட்டங்கள் எவை?

10. (i) அறிவுப் பொருளாதாரம் என்றால் என்ன?

(ii) பொருளாதார வளர்ச்சி, வாழ்க்கைத்தர முன்னேற்றத்தை ஏற்படுத்தத் தேவையான நிபந்தனைகள் எவை?

(iii) கொள்வனவுச் சக்திச் சமன்பாடு என்பதன் பொருள் யாது?

(iv) இலங்கையில் அண்மைய ஆண்டுகளில் பிராந்திய சமமின்மையைக் குறைப்பதற்கு அரசாங்கம் மேற்கொண்ட நடவடிக்கைகள் யாவை?

(v) இலங்கை ஏற்கனவே அடைந்துள்ள புத்தாயிரமாண்டு அபிவிருத்தி இலக்குகள் எவை?

(vi) பொருளாதார வளர்ச்சியானது பிரதானமானதொரு பேரினப் பொருளாதார இலக்காக அமைவது ஏன்?

(vii) அ. இலங்கையில் கல்வி முறையில் நீர் காணும் குறைபாடுகள் யாவை?

ஆ. சிறந்த கல்வி முறையால் நாடு அடையக்கூடிய அனுகூலமான விடயங்கள் யாவை?

இ. புத்தாயிரமாண்டு அபிவிருத்தி இலக்குகள் எவை?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**எதிர்பார்க்கை வினாத்தாள் கல்வி பொதுத் தராதரப் பத்திர (உயர் தர)ம் பரீட்சை, ஓகஸ்ட் 2013**
**விடைகள் - பொருளியல் I பகுதி I**

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 01. | 1 | 02. | 3 | 03. | 4 | 04. | 4 | 05. | 3 |
| 06. | 5 | 07. | 1 | 08. | 3 | 09. | 5 | 10. | 5 |
| 11. | 1 | 12. | 4 | 13. | 1 | 14. | 4 | 15. | 3 |
| 16. | 2 | 17. | 3 | 18. | 3 | 19. | 3 | 20. | 1 |
| 21. | 1 | 22. | 2 | 23. | 4 | 24. | 5 | 25. | 3 |
| 26. | 2 | 27. | 5 | 28. | 4 | 29. | 5 | 30. | 4 |
| 31. | 5 | 32. | 3 | 33. | 2 | 34. | 1 | 35. | 2 |
| 36. | 5 | 37. | 2 | 38. | 3 | 39. | 3 | 40. | 3 |
| 41. | 5 | 42. | 2 | 43. | 3 | 44. | 5 | 45. | 4 |
| 46. | 4 | 47. | 5 | 48. | 3 | 49. | 5 | 50. | 1 |

**விடைகள் - பொருளியல் I பகுதி I**

01. (i) பொருளாதாரப் அடிப்படை பிரச்சினைகள்

எதனை உற்பத்தி செய்தல்?
எவ்வளவை உற்பத்தி செய்தல்?
எவ்வாறு உற்பத்தி செய்தல்?
யாருக்காக உற்பத்தி செய்தல்?

ஒவ்வொரு சமூகமும் பின்வரும் பொதுவான பொருளாதாரப் பிரச்சினைகளுக்கு முகங்கொடுக்கின்றன.

வளப்பகிர்வு :- எதனை உற்பத்தி செய்வது என்ற பிரச்சினை வளப்பகிர்வும் பிரச்சினையாகும்.

உற்பத்தி :- எவ்வாறு உற்பத்தி செய்தல் என்ற பிரச்சினை உற்பத்தியுடன் தொடர்புடைய பிரச்சினையாகும்.

உற்பத்திப்பகிர்வு :- யாருக்கக உற்பத்திசெய்தல் என்ற பிரச்சினை உற்பத்திப் பகிர்வடன் பகிர்வுடன் தொடர்பான பிரச்சினையாகும்.

இவை தவிர்ந்த நாடுகள் எதிர்நோக்கும் வேறு அடிப்படை பிரச்சினைகள்

1. பணவீக்க பிரச்சினை
2. வருமான ஏற்றத்தாழ்வு பிரச்சினை
3. சென்மதி நிலுவைப்பிரச்சினை
4. வேலையின்மை பிரச்சினை
5. வளங்களின்திறமையான பயன்பாடு சம்மந்தமான பிரச்சினை
6. போதுமான பொருளாதார வளர்ச்சி உண்டா? இல்லையா? என்ற பிரச்சினை
7. சூழல் மாசடைதல் பிரச்சினை
8. மூலதனப் பிரச்சினை
9. தொழில் நுட்பப்பிரச்சினை
10. உணவுப்பிரச்சினை

(ii)
- வளங்கள் வரையறுக்கப்பட்டிருத்தல்
- வளங்கள் மாற்று உபயோகத்தன்மை உடையதாக இருத்தல்
- வளங்கள் பற்றாக்குறையுடையதாக இருத்தல்
- மனிததேவைகள் எல்லையற்றிருத்தல் ஆகிய காரணிகளால் அடிப்படைப் பொருளாதாரப் பிரச்சினைகள் தோற்றம்பெற்றன.
- எதனை எவ்வளவு உற்பத்தி செய்தல் என்ற பிரச்சினை பின்வரும் காரணிகளால் ஏற்பட்டது.
- வளங்கள் வரையறுக்கப்பட்டிருத்தல், வளங்களின் மாற்றுப்பயன்பாடு, மனிததேவைகள் எல்லையற்றிருத்தல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- எவ்வாறு உற்பத்தி செய்தல் என்ற பிரச்சினை பின்வரும் காரணிகளால் ஏற்பட்டது.
- காரணிகளை ஒன்றிணைக்கக் கூடிய மாற்று முறைகள் இருத்தல் (பல தொழில்நுட்ப முறைகள் இருத்தல்)
- ஒப்பீட்டுச் செலவு மாறுபடுதல்
- வளங்கள் வரையறுக்கப்பட்டிருத்தல்
- எவ்வாறு உற்பத்தி செய்தல் என்ற பிரச்சினைகளுக்குத் தீர்வு தேடும்போது பிரதானமாக இரு தொழில்நுட்ப முறைகளைக் கைக்கொள்வதைக் காண முடியும்.
  1. ஊழியச் செறிவுமுறை
  2. மூலதனச் செறிவுமுறை
- யாருக்காக உற்பத்தி செய்தல் என்ற பிரச்சினை பின்வரும் காரணிகளால் ஏற்பட்டது.
  1. வளங்களின் பற்றாக்குறை
  2. வளங்களின் மாற்றுப் பயன்பாடு
  3. சமூகத்தில் பல பொருளாதார வர்க்கங்கள், அவற்றின் செறிவு, பரிணாமங்கள் என்பவை வேறுபடல்.

(iii) பல்வகைப் பொருளாதார முறைமைகளின் தோற்றம்

ஆக்கச்சாதனங்கள் தொடர்பான விடயங்கள், அடிப்படைப் பொருளாதார பிரச்சினைகளுக்கு தீர்வு காண்பதில் காணப்படும் வேறுபாடுகள், நோக்கங்கள், ஊக்குவிப்புக்கள், துலங்கல்கள் என்பவற்றின் அடிப்படையில் பல்வகைப் பொருளாதார முறைமைகள் தோன்றின.

ஆக்கச்சாதனங்கள் தனியாருக்கு உடமை உடையதாகவும் உச்ச இலாபநோக்குடனும் பொருளாதார அடிப்படைப் பிரச்சினைகள் விலைப்பொறிமுறை மூலம் தீர்க்கப்படுவதாகவும் இலாபமே பிரதான ஊக்குவிப்பாக அமைகின்ற பொருளாதாரமே சந்தை பொருளாதாரம் ஆகும்.

ஆக்கச்சாதனங்கள் அரசுக்கு உடமை உடையதாகவும் சமூக நலன், சமூகநீதி, சேவை நோக்குடனும் பொருளாதார அடிப்படைப் பிரச்சினைகள் மத்திய திட்டமிடல் குழு மூலம் தீர்க்கப்படுவதாகவும் ஊக்குவிப்பானது அதிகாரத்தின் ஊடாக அமைகின்ற பொருளாதாரமே சமவுடமைப் பொருளாதாரம் ஆகும்.

ஆக்கச்சாதனங்கள் கணிசமான அளவு அரசுக்கும் தனியாருக்கும் சொந்தமாகவும் தனியார் உச்ச இலாப நோக்குடனும் அரசு சமூகநலன், சமூகநீதி நோக்குடனும் தனியார் விலைப் பொறிமுறையை அடிப்படையாகக் கொண்டு உற்பத்தி, பங்கீட்டில் ஈடுபட, அரசு மத்திய திட்டமிடல் குழு மூலமாக பொருளாதார செயற்பாட்டில் ஈடுபடுகின்ற பொருளாதாரமே கலப்புப் பொருளாதாரம் ஆகும்.

சில பொருளாதார முறைமைகளில் தாய், தந்தை நாடு பற்றிய உணர்வு பூர்வமான ஈடுபாடுகள், கலாச்சார ரீதியான பிணைப்புக்கள் ஊடாக ஊக்குவிப்பு வழங்கல் நடைபெறலாம்.

இன்று தமது சாதன உடமை, சாதன அசைவு, நோக்கம், பொருளாதரா அடிப்படை பிரச்சினைகளுக்கான தீர்வு கருவி என்பவற்றை மாற்றிக் கொண்டுள்ள புதிய பொருளாதார முறைமைகளும் எழுந்துள்ளன.
உதாரணம் : மாறுநிலைப் பொருளாதாரங்கள்.
இன்று உலகில் குலமரபு பொருளாதாரங்களும் உள்ளன.

(iv) பொருளாதார அமைப்பொன்றில் தீர்மானம் எடுக்கும் குழுக்கள்

- உற்பத்தியாளர்
- வீட்டுத்துறையினர்
- அரசு துறையினர்
- தன்னிச்சையான நிறுவனத் துறையினர்.

(v) சந்தை Market

முடிவுப் பொருட்களையும் உற்பத்திக் காரணிகளையும் பரிமாற்றிக் கொள்வதற்காக வாங்குபவனும் வழங்குபவனும் செய்து கொள்கின்ற அனைத்து ஏற்பாடுகளும் சந்தை ஆகும்.

இது இருவகைப்படும்.

1. முடிவுப் பொருட்சந்தை
2. காரணிச் சந்தை

1. முடிவுப் பொருட்சந்தை

முடிவுப் பொருட்களை பரிமாற்றிக் கொள்வதற்காக நுகர்வோனும் உற்பத்தியாளனும் செய்து கொள்கின்ற அனைத்து ஏற்பாடுகளும் முடிவுப் பொருள் சந்தை ஆகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முடிவுப் பொருட்களின் கேள்வி

நுகர்வோர் முடிவுப் பொருட்களுக்கு நேரடியாகவே கேள்வி எழும்புவர். ஆகவே இவற்றுக்கான கேள்வி நேர் கேள்வி ஆகும்.

முடிவுப் பொருட்களின் உதாரணங்கள்:

- பாண்
- சேர்ட் (Shirt)
- குடும்ப நுகர்வுக்காக வாங்கப்பட்ட மோட்டார் வண்டி.

குறிப்பு : முடிவுப் பொருட் சந்தையானது நிறைபோட்டிச் சந்தை, அரைகுறை போட்டிச் சந்தை என்றெல்லாம் வகையிடப்படுகிறது.

2. காரணிச் சந்தை

உற்பத்திக் காரணிகளை பரிமாற்றிக்கொள்ள உற்பத்தியாளனும் உற்பத்திக் காரணி உடமையாளனும் செய்து கொள்கின்ற அனைத்து ஏற்பாடுகளும் காரணிச் சந்தை ஆகும்.

உற்பத்திக் காரணிகளுக்கான கேள்வி

நுகர்வோர் முடிவுப் பொருட்களுக்கு கேள்வி எழுப்புவர் அதனூடாக அந்த முடிவுப் பொருளை உற்பத்தி செய்கின்ற உற்பத்திக் காரணிகளுக்கு கேள்வி ஏற்படுகின்றது.

ஆகவே காரணிகளுக்கான கேள்வி நேரில் கேள்வியாகும்.

உற்பத்திக் காரணிகளுக்கு உதாரணங்கள்.

| | |
|---|---|
| இயந்திரம் | மோட்டார் வாகனம் |
| கணனி பொறியியலாளர் சேவை | காணி கட்டிடம் |

குறிப்பு : சந்தையானது பரிமாற்றப்படுவது என்ன? எவ்வெகுமதிக்கு பரிமாற்றப்படுகிறது? என்ற அடிப்படையில் வகையிடப்படுகிறது.

(vi) மத்திய திட்டமிடல் குழுவில் உள்ள குறைபாடுகள் காரணமாகவும் வேறு அழுத்தங்களாலும் மத்தியத்திட்டமிடல் குழுவினால் வழிநடத்தப்படுகின்ற பொருளாதாரம் தோல்வியடையுமாயின் அது அரசாங்கத் தோல்வி ஆகும்.

சந்தைத் தோல்வியைத் தடுப்பதற்கு பொருளாதாரத்தில் அரசு தலையிட்டும் அப்பொருளாதாரம் தோல்வியடையுமாயின் அது அரசாங்கத் தோல்வியே ஆகும்.

அரசு தனது பொருளாதார இலக்குகளை வெற்றிகரமாக அடைய முடியாத நிலையைக் குறிக்கும். இதன்போது பணவீக்கம், வேலையின்மை, உற்பத்திப் பெருக்கம் போதாமை, நாணயத்தின் வெளிப் பெறுமதித் தேய்வு என்பன இடம்பெறும்.

இதற்குக் காரணங்கள்

- மத்திய திட்டமிடல் குழுவின் குறைபாடுகள்
- மத்திய திட்டமிடல் குழுவுக்கு போட்டியின்மை
- வழக்கொழிந்த முகாமை
- திறமையற்ற முகாமை
- திறனற்ற வள ஒதுக்கீடு
- உற்பத்தி திறன் போதாமை
- உற்பத்திக்கான உள்ளார்ந்த ஊக்குவிப்பின்மை
- நுகர்வோர் இறைமையின்மை
- அதிக அரச தலையீடுகள்
- முதலாளித்துவப் பொருளாதாரத்தின் அழுத்தம்

02. (i) இவற்றிக்கிடையே நெருங்கிய பரஸ்பரத் தொடர்பு காணப்படுகின்றனது.

மனிதத் தேவைகள் என்பது மனிதன் உயிர்வாழ அத்தியாவசியமானதும், இயல்பாகவே எழுகின்ற நாட்டங்களாகும்.

விருப்பங்கள் என்பது தேவைகளைப் பூர்த்தி செய்யும் பல்வேறு வழிகளாகும்.

கொள்வனவாற்றல் என்பது குறித்த பண்டத்தில் அல்லது சேவையினைக் கொள்வனவு செய்யக்கூடிய பொருளாதார வலுவைக் குறிக்கும்.

கேள்வி என்பது பொருளாதாரப் பண்டங்களுக்கு மனிதத் தேவைகள், விருப்பங்கள் என்பவற்றுடன் கொள்வனவாற்றலும் சேரும்போது சந்தையின் கேள்வியாகப் பரிணமிக்கின்றது. தேவையின் மிக உறுதியான வடிவமாகக் கேள்வியைக் குறிப்பிடலாம்.

(ii) தனிநபர் கேள்வி

குறித்த நேரத்தில், குறித்த சந்தையில் குறித்த பொருளின் கேள்வியினை நிர்ணயிக்கும் காரணிகளில் குறித்த பொருளின் விலை தவிர்ந்த ஏனைய காரணிகள் மாறாநிலையில் குறித்த பொருளின் பல்வேறு விலை மட்டங்களில் குறித்த சந்தையில் உள்ள தனி ஒரு நுகர்வோன் வாங்கத் தயாராக உள்ள வேறுபட்ட அளவுகளே தனிநபர் கேள்வி எனப்படும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குறித்த சந்தையிலுள்ள அனைத்துத் தனி நபர்களது கேள்வியைச் சேர்த்து சந்தைக் கேள்வி பெறப்படும்.

சந்தைக் கேள்வி

குறித்த நேரத்தில், குறித்த சந்தையில் குறித்த பொருளின் கேள்விலை நிர்ணயக்கும் காரணிகளில் குறித்த பொருளின் விலை தவிர்ந்த ஏனைய காரணிகள் மாறாநிலையில் குறித்த பொருளின் பல்வேறு விலை மட்டங்களில் குறித்த சந்தையில் உள்ள அனைத்து நுகர்வோர்களும் வாங்கத் தயாராக உள்ள மொத்த வேறுபட்ட அளவுகளே சந்தைக் கேள்வி எனப்படும்.

குறித்த பண்டத்தின் கேள்வியை நிர்ணயிக்கும் காரணிகள் அனைத்தும் சந்தைக் கேள்வியை நிர்ணயிக்கும்.


(iii) கேள்வி விதி

வரைவிலக்கணம் I:

குறித்த நேரத்தில் குறித்த சந்தையில் குறித்த பொருளின் கேள்விலையை நிர்ணயிக்கும் காரணிகளில் குறித்த பொருளின் விலை தவிர்ந்த ஏனைய காரணிகள் மாறாநிலையில் குறித்த பொருளின் விலைக்கும் அதன் கேள்வித் தொகைக்கும் இடையில் எதிர்கணியத் தொடர்பு உண்டு எனக் கூறும் விதி கேள்வி விதி எனப்படும்.

வரைவிலக்கணம் II:

கேள்வி நீட்டம் (கேள்வி விரிவு) கேள்வி ஒடுக்கம் (கேள்வி சுருக்கம்) என்பவற்றை விளக்குவதே கேள்வி விதி எனப்படும்.




P = குறித்த பண்டத்தின் விலை Qd = கேள்வித் தொகை

கேள்வி நீட்டம்:

10/- இருந்து 5/- ஆகக் குறையும் போது அதன் கேள்வித்தொகை 100 அலகுகளில் இருந்து 300 அலகுகளாகக் கேள்வித்தொகை கூடுகிறது. இது கேள்வி நீட்டமாகும்.

கேள்வி ஒடுக்கம்:

5/= இருந்து 10/= ஆக விலை கூடும் போது 300 அலகுகளில் இருந்து 100 அலகுகளாக கேள்வித் தொகை குறைகிறது. இது கேள்வி ஒடுக்கமாகும்.

புறநடைக் கேள்வி தோன்றுகின்ற சந்தர்ப்பங்கள்

- கௌரவப் பண்டங்களுக்கு
  உதாரணம் : வைரம்
- தீவிரப்பழக்க வழக்கப் பண்டங்களுக்கு
  உதாரணம் : போதைவஸ்து
- இழிவுப் பண்டங்களுக்கு
- கி்ஃபன் பண்டங்களுக்கு
- நுகர்வோர் உத்தேச நடவடிக்கையில் ஈடுபடும் போது
- விலையினைக் கொண்டு தர நிர்ணயிக்கப்படும் சந்தர்ப்பங்கள்
- குறை நிரப்புப் பண்டங்களுக்கு.

(iv) கேள்விவிதி தொழிற்படக் காரணங்களில் ஒன்றாக விலை விளைவு உள்ளது

விலை விளைவு

1. வருமான விளைவு
2. ஒப்பீட்டு விளைவு ஆகியவற்றை உள்ளடக்கியுள்ளது.

குறித்த பண்டத்தின் விலை உயருமாயின் குறித்த பண்டத்தை நுகர்ந்த நுகர்வோர் அதன் பிரதியீட்டுப் பண்டத்தை நுகர முற்படுவர். ஆகவே குறித்த பண்டத்தின் கேள்வித் தொகை குறையும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குறித்த பண்டத்தின் விலை குறையுமாயின் குறித்த பண்டத்தின் பிரதியீட்டுப் பண்டத்தை நுகர்ந்த நுகர்வோர் குறித்த பண்டத்தை நுகர முற்படுவர். ஆகவே குறித்த பண்டத்தின் கேள்வித் தொகை கூடும்.

குறித்த பண்டத்தின் விலை மாறுகின்ற போது நுகர்வோர் ஏனைய பண்டங்களின் விலையோடு ஒப்பீடு செய்து சந்தையில் நடக்க முற்படுவதால் இதனை ஒப்பீட்டு விளைவு என அழைக்கின்றோம்.

(iv) அ. பிரதியீட்டுப் பண்டம் :- சீனி, கற்கண்டு, பொற்றோலியம் - நிலக்கரி


ஆ. போட்டி நிரம்பல் பண்டம் :- இளநீர் - தேங்காய்

இ. நிரப்புப் பண்டம் :- பெற்றோல் - பெற்றோல் கார், தேயிலை, சீனி

ஈ. கூட்டு நிரம்பல் பண்டம் :- அரிசி - தவிடு, தேங்காய் - மட்டை

உ. குறை நிரப்புப் பண்டம் :- தையலூசி, தையல் இயந்திரம், பொத்தான் - ஆடை

03. (i)




(i) Qd = 600 - 10P

Qs = 10P

Qd = Qs

600 - 10P = 10P

600 = 20P

P = 600/20

சமனிலை விலை (P) = 30/=

Qd = 600 - 10P

= 600 - 10 x 30

= 600 - 300

= 300 அலகுகள் சமநிலைத் தொகை

(ii) $Qs_1$ = 10 (P + S)

S = 10

$Qs_1$ = 10 (P + 10)

$Qs_1$ = 10 P + 100 or $Qs_1$ = 100 + 10P

(iii) Qd = $QS_1$

600 - 10P = 100 + 10P

500 = 20P

500/20 = P

P = 25/- (மானியத்திற்குப் பின் சமநிலை விலை)

Qd = 600 - 10P

= 600 - 10 x 25

= 600 - 250

= 350 அலகுகள்

(மானியத்திற்குப் பின் சமநிலை தொகை)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(iv) மானியத்திற்குப் பின்னர் நுகர்வோன் செலுத்தும் விலை = 25 ரூபா
மானியத்திற்குப் பின்னர் உற்பத்தியாளர் பெறும் விலை = 35 ரூபா (25 + 10)

(v) நுகர்வோன் மற்றும் உற்பத்தியாளன் மிகை ரூபா 3250 அளவால் அதிகரித்தது.

(vi) மானியத்தின் காரணமாக அரசுக்கு 3, 500 ரூபாய்ச் செலவொன்றைத் தாங்க வேண்டி ஏற்படுகிறது.

04. (i) தேசிய வருமானம்

ஒரு நாட்டின் வதிவாளர் அல்லது அந்நாட்டுக்குச் சொந்தமான உற்பத்திக் காரணிகள் உற்பத்திச் செயற்பாட்டில் ஈடுபட்டு பெற்றுக்கொண்ட மொத்த காரணி வருமானங்களின் கூட்டுத்தொகையே தேசிய வருமானம் எனப்படும்

தனிநபர் வருமானம்

வீட்டுத் துறையினருக்குக் குறித்த காலப்பகுதியில் கிடைக்கும் மொத்த வருமானங்களின் கூட்டுத்தொகையாகும் வீட்டுத்துறையினருக்குக் கிடைக்கும் மொத்த வருமானத்தை தேசிய வருமானத்திலிருந்து பகிரப்படாத இலாபங்கள், ஏற்பாடுகள், ஒதுக்கங்கள், கம்பனி இலாபங்கள் மீதான வரி போன்றவற்றை நீக்கி வீட்டுத்துறையினருக்குக் கிடைக்கும் மாற்றல் வருமானங்களை சேர்ப்பதன் மூலம் தனிநபர் வருமானத்தைக் கணிக்கலாம்.

| | | | |
|---|---|---|---|
| மொத்த உள்நாட்டு உற்பத்தி | | | XX |
| வெளிநாட்டில் இருந்து கிடைத்த காரணி வருமானம் | | XX | |
| வெளிநாட்டுக்கு அனுப்பிய காரணி வருமானம் | | (XX) | |
| தேறிய வெளிநாட்டு காரணி வருமானம் | | | XX |
| தேசிய வருமானம் | | | XXX |
| வீட்டுத்துறையினர் சம்பாதித்து அவர்களுக்கு அதில் கிடைக்காது போகும் | | | |
| பகிரப்படாத இலாபங்கள் | XX | | |
| ஏற்பாடுகள் | XX | | |
| ஒதுக்கங்கள் | XX | | |
| கம்பனி இலாபங்கள் மீதான வரி | XX | | |
| ஏனையவை | XX | | |
| | | | (XX) |
| வீட்டுத்துறையினருக்குக் கிடைக்கும் மாற்றல் வருமானங்கள் | | | |
| ஓய்வூதியங்கள் | XX | | |
| சமூக நலன்புரி கொடுப்பனவுகள் | XX | | |
| சமூக பாதுகாப்பு செலுத்தல்கள் | XX | | |
| ஏனையவை | XX | | |
| | | | XX |
| தனிநபர் வருமானம் | | | XXXX |

(ii) தேசிய கணக்கீட்டில் காணப்படும் குறைபாடுகள் அல்லது வரையறைகள் வருமாறு:

- இல்லத்தரசிகளின் பங்களிப்பு முழுமையாகக் கவனத்தில் கொள்ளாமை
- சந்தைக்கு அனுப்பப்படாத சுயதேவை பூர்த்தி உற்பத்திகளின் (நேர் உற்பத்திகள்) கொடுக்கல் வாங்கல்கள் கவனத்தில் கொள்ளப்படாமை
- முறைசாரா பொருளாதார நடவடிக்கைகள்
- சட்டவிரோத பொருளாதார நடவடிக்கைள்
- உற்பத்தியின் தரம் கவனத்தில் எடுக்கப்படாமை
- சூழல் பாதிப்புகள் கவனத்தில் எடுக்கப்படாமை

(iii) வர்த்தக மீதி குறைநிலையாகும்.

தேசிய வருமானம் $Y = C + I + G + (X - M)$

உள்நாட்டுச் செலவீடு $E = C + I + G$

$Y - E = (X - M)$

தேசிய வருமானத்தை விட மொத்தச் செலவு அதிகரித்தால் வர்த்தக மீதி குறைநிலையாகும்.

$Y < E = -(X - M)$ வர்த்தக மீதி குறைநிலையாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(iv) 1. வருமானம் = செலவு

$Y = E$

$Y = C + I + G + (X - M)$

2. வெளிப்பாய்ச்சல் = உட்பாய்ச்சல்

$S + T + M = I + G + X$

(iv) $C = a + by$

$S = -a + (1 - b)y$

C = நுகர்வு


a = தன்னியல்பான நுகர்வு

-a = தன்னியல்பான சேமிப்பு


b = எல்லை நுகர்வு நாட்டம்

(1-b)= எல்லைச் சேமிப்பு நாட்டம்

நுகர்வுச் சார்பினை வரிடத்தில் பின்வருமாறு காட்டலாம்.




சேமிப்புச் சார்பினை வரிபடத்தில் பின்வருமாறு காட்டலாம்.




(iv) அ. $S = -400 + 0.25y$

ஆ. $S = -400 + 0.25y$

$o = -400 + 0.25$

$400 = 0.25y$

$y = \frac{400}{0.25}$

$y = \frac{40000}{25}$

y = 1600 மில்லியன் ரூபா

வருமான மட்டம் 1600 மில்லியன் ரூபாவாக காணப்படும் போது சேமிப்பு பூச்சியமாக அமையும்.

இ. $y = C + I + G$

$y = 400 + 0.75(y\text{-}t) + 30 + 50$

$y = 400 + 0.75(y\text{-}20) + 80$

$= 400 + 0.75y - 15 + 80$

$= 465 + 0.75y$

$0.25y = 465$

$y = 465 / 0.25$

$y = 46500 / 25$

y = 1860 மில்லியன் ரூபா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

05. (i) அ. $C = ?$

$C = 400 + 0.8\,(y - t)$

$C = 400 + 0.8\,(y - 220)$

$C = 400 + 0.8y - 176$

$y = C + I + G$

$y = 224 + 0.8y + 80 + 400$

$y = 704 + 0.8y$

$0.2y = 704$

$y = \frac{704}{0.2}$

$y = 3520$ பில்லியன் ரூபா

ஆ. முறை I

$y = C + I + G$

$= 224 + 0.8y + 100 + 400$

$= 724 + 0.8y$

$0.2y = 724$

$y = \frac{724}{0.2}$

$y = \frac{7240}{2}$

$y = 3620$ பில்லியன் ரூபா

தேசிய வருமானம் 100 பில்லியன் ரூபாவால் அதிகரிக்கும்

முறை II

$K = 1/0.2$

$K = 5$

$I = 20$ பில்லியன் ரூபா அதிகரித்துள்ளது.

$\therefore$ சுற்றோட்டம் 100 பில்லியன் ரூபாவால் அதிகரிக்கும்

$\therefore$ முதலீடு 100 பில்லியன் ஆகும்.

ஆரம்ப சுற்றோட்டம் $y = 3520$

$\therefore$ புதிய $y = 3520 + 100$

$= 3620$ பில்லியன் ரூபா

இ. பெருக்கி $K = 5$

ஆரம்ப தேசிய வருமானம் $=$ 3620 பில்லியன் ரூபா

தற்போது அதிகரிக்க வேண்டிய வருமான மட்டம் $= 40000 - 3620 = 380$

$\therefore$ முதலீடானது $380 \div 5 =$ 76 பில்லியன் ரூபாவினால் அதிகரிக்க வேண்டும்.

ஆரம்ப முதலீடு $=$ 100 பில்லியன் ரூபா

தற்போது அதிகரிக்க வேண்டிய முதலீட்டளவு $=$ 76 பில்லியன் ரூபா

$\therefore$ இறுதி முதலீடு / புதிய முதலீட்டு மட்டம் $=$ 176 பில்லியன் ரூபா

(ii) குறிப்பிட்ட காலப்பகுதியின் குறித்த பொருளாதாரமொன்றில் நடவடிக்கையாளர்களால் (வீட்டுத்துறை, நிறுவனத்துறை, அரசதுறை) பொருட்கள் சேவைகளின் மீது கொள்வனவு செய்யத் திட்டமிட்டுள்ள செலவுப் பாய்ச்சல் மொத்தக் கேள்வி எனப்படும்

$AD = C + I + G + (X - M)$

AD = மொத்தக் கேள்வி

C = நுகர்வு

I = முதலீடு

G = அரச செலவு

(X - M) = தேறிய ஏற்றுமதி

- மொத்த நிரம்பல் = மொத்தக் கேள்வி $(Y = E)$ அமையும் போது சமநிலை வருமான மட்டம் கிடைக்கப் பெறும்.
- மொத்தக் கேள்வியானது மெய் உற்பத்திப் பெறுமதியை (மொத்த நிரம்பலை) விட உயர்வாகக் காணப்படுமாயின் வருமான மட்டம் விரிவடையும் $(Y < E)$
- மொத்தக் கேள்வியானது மெய் உற்பத்திப் பெறுமதியை (மொத்த நிரம்பலை) விட குறைவாகக் காணப்படுமாயின் வருமான மட்டம் சுருக்கமடையும் $(Y > E)$

(iii)
- பொருளாதாரமொன்றின் சேமிப்பு வெளிப்பாய்ச்சலாகக் காணப்படும்.
- இதனால் மொத்தக் கேள்வி குறைவடையும்.
- பொருளாதாரமொன்றின் முதலீடு உட்பாய்ச்சலாகக் காணப்படும்.
- முதலீட்டினால் மொத்தக்கேள்வி விரிவடையும்.
- சேமிப்பை விட முதலீடு கூடுதலாக $(S < I)$ இருந்தால் மொத்தக்கேள்வி அதிகரிக்கும் இதனால் மெய் வெளியீட்டு மட்டம் விரிவடையும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- சேமிப்பை விட முதலீடு குறைவாக (S > I) இருந்தால் மொத்தக் கேள்வி குறையும் இதனால் மெய் வெளியீட்டு மட்டம் சுருக்கமடையும்.

(iv) திறந்த மாதிரியில் சமநிலை தேசிய வருமானத்தை இருவிதமாகக் காட்டலாம்.

1. திறந்த பொருளாதாரமொன்றின் மொத்த வருமானம் = திறந்த பொருளாதாரமொன்றின் மொத்தச் செலவீடுகள்

குறியீட்டினடிப்படையில் $Y = E$

$$Y = C + I + G + (X - M)$$

2. திறந்த பொருளாதாரமொன்றி உட்பாய்ச்சல்கள் = திறந்தபொருளாதாரமொன்றி வெளிப்பாய்ச்சல்கள்

$$J = W$$

$$I + G + X = S + T + M$$

06. (i)
- அரசு தனது பொருளாதார இலக்குகளை வெற்றிகரமாக அடைய முடியாத நிலையைக் குறிக்கும்.
- மத்திய திட்டமிடல் குறைபாடுகள் காரணமாகவும் வேறு அழுத்தங்கள் காரணமாகவும் அதனால் வழிநடத்தப்படும் பொருளாதாரம் எதிர்பார்த்த பொருளாதார இலக்குகளை அடைய முடியாது போகும் நிலை
- பொருளாதாரத்தின் சந்தைத் தோல்வியைத் தடுப்பதற்காக / விலைப் பொறி முறையின் குறைபாடுகளைச் சரி செய்வதற்காக அரசு துறை பொருளாதார தலையீட்டை செய்தபோதிலும் முன்னரைவிட வளங்கள் செயற்றிறன் அற்ற வகையிலும் சமமற்ற நிலையும் உத்தம வளப்பயன்பாடு இடம்பெறாத நிலையைக் குறிக்கும்.

அரச தோல்வியைப் பிரதிபலிக்கும் விடயங்கள்

- முன்னரைவிட வளங்கள் செயற்றிறன் அற்ற பயன்பாட்டில் காணப்படல்
- சமூக நீதியின்மை அதிகரித்துச் செல்லல்
- முன்னரைவிட உற்பத்தி வளர்ச்சி வேகம் குறைதல் அல்லது எதிர்பார்த்த உற்பத்தி இலக்குகளை அடைய முடியாது போதல்
- மத்திய திட்டமிடல் முறையின் தோல்வி
- நுகர்வோனின் விருப்பத்தேர்வுக்கு அமைய உற்பத்தி செய்யத் தவறுதல், ஊழல்கள், காலதாமதங்கள்
- சந்தைத் தோல்வி ஏற்படுவதை அரசினால் தடுக்க முடியாது போதல் / சந்தையைத் திறமையாக ஒழுங்குபடுத்த முடியாமை

(ii) அ. சந்தையினால் வழங்கப்படக்கூடிய பொருட்கள் சேவைகளை உற்பத்தி செய்து விநியோகம் செய்யும் நடவடிக்கையின் ஈடுபட்டுள்ள அரசாங்க நிறுவனங்களும் கூட்டுத்தாபனங்களும் அரச முயற்சிகள் எனப்படும்.

உதாரணங்கள்

1. இலங்கை கனிப்பொருட் கூட்டுத்தாபனம்
2. இலங்கை வங்கி
3. ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ்
4. இலங்கை மத்திய போக்குவரத்துச் சபை
5. புகையிரதத் திணைக்களம்
6. அரச பொறியியற் கூட்டுத்தாபனம்
7. மிகின் லங்கா
8. இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம்
9. அரச மரக்கூட்டுத்தாபனம்
10. மின்சார சபை
11. ரூபவாஹினி கூட்டுத்தாபனம்
12. அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனம்

ஆ. காரணங்கள்

- தீர்மானம் எடுத்தல், நடைமுறைப்படுத்தல் என்பவற்றில் காலதாமதம்
- அதிகரித்த அரசியல் தலையீடுகள்
- விரயங்களும் ஊழல்களும்
- ஊக்குவிப்புக்களின்மை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- இலஞ்சம்
- யதார்த்த பூர்வமான விலைக்கொள்கையொன்று காணப்படாமை
- மிகை ஊழியர்கள், வினைத்திறன் போதாமை
- தீர்மானம் எடுக்கும் பொறிமுறை அமைப்பு, பல குறைபாடுகளைத் தோற்றுவிக்கின்றன.
- பலவீனமான முகாமைத்துவம்
- தொழில் தருநருக்கும் தொழிலாளருக்கும் இடையிலான தொடர்புகள் பலவீனமானதாகக் காணப்படுதல்

விளைவுகள்

- அரசாங்கத்தின் மானியச் செலவு அதிகரித்தலும், பாதீட்டில் அது உண்டாகும் தாக்கமும்
- தனியார் துறையின் பொருளாதாரக் தலையீட்டிற்கு வழிவகுத்தலும் ஊக்குவித்தலும்
- வள விரயங்கள், வளங்களின் செயற்திறனற்ற நிலைக்கு வழிவகுக்கும்
- அரசாங்கத் தோல்விக்குக் காரணமாக அமையலாம்.
- பேரினப் பொருளாதார உறுதி பாதிப்படையும்.

(iii)
- மாற்றல் கொடுப்பனவுகளை மேற்கொள்ளல் (நிதி நன்கொடைகளையும் நிதிசாரா நன்கொன்டைகளையும் மேற்கொள்ளல்)
- மேன்மைப் பண்டங்களை அதிகளவு வழங்கல் (கல்வி, சுகாதாரம், மருத்துவம் போன்றவற்றை இலவசமாகவோ அல்லது மானியம் அளிக்கப்பட்ட விலைகளிலோ வழங்கல்)
- வருமான உச்ச வரம்பு, செல்வ உச்ச வரம்பு எல்லைகளை விதித்தல்

  உதாரணம் : சொத்து வரி விதிப்பு
- சட்டங்களையும் விதிகளையும் நடைமுறைப்படுத்தல்
- செல்வந்தர் அதிகம் நுகரும் பண்டங்கள் மீது வரி விதித்தல் / உயரளவில் வரிவிதித்தல்

  உதாரணம் : ஆடம்பரப் பண்டங்கள்
- சந்தையில் கட்டுப்பாட்டு விலைகளை விதித்தல்

  உதாரணம் : உயர்ந்தபட்சக் கட்டுப்பாட்டு விலை, குறைந்தபட்சக் கட்டுப்பாட்டு விலை
- குறைந்தபட்ச கூலிச் சட்டங்களை இயற்றலும், அமுல்படுத்தலும்
- அத்தியாவசியப் பண்டங்கள் மீதான வரியை நீக்குதல் / குறைத்தல்

(iv)
- சந்தையின் உருக்குலைப்பு
  - மானியங்கள் சந்தை விலைகளை உருக்குலைக்கின்றன. இது சாதனங்கள் தவறான முறையில் ஒதுக்கீடு செய்யப்படுவதற்கு வழிவகுகின்றது.
  - ஏற்றுமதி மானியங்கள் பண்டங்கள் சேவைகள் என்பவற்றின் கட்டில்லா வர்த்தகத்தை உருக்குலைத்து, விருத்தியடையும் நாடுகள் விருத்தியடைந்த நாடுகளின் சந்தைகளில் போட்டியிடும் ஆற்றலை வெகுவாகப் பாதிக்கின்றன.
- எதேச்சாதிகாரமான உதவி
  - எந்தக் குழுவினர் அல்லது தொழில்கள் மானியம் பெறலாம் என்பது எதேச்சாதிகாரமாகத் தீர்மானிக்கப்படலாம்.
- நிதிச்செலவு / பாதீட்டுச் செலவு
  - மானியங்கள் செலவு கூடியவையாக இருக்கலாம்.

    உதாரணம் : ஐரோப்பிய ஒன்றியத்தின் பொது விவசாயக் கொள்கையின் நிதிச்செலவு
- இதை யார் செலுத்துவது? இதன் நன்மைகளைப் பெறுவது யார்? ஒரு மானியத்தின் இறுதிச் செலவு நுகர்வோரையே (வரி செலுத்துவோன்) சாரும். இதன் மூலம் அவர்கள் எவ்வித நன்மைகளையும் பெறாதவர்களாகவும் இருக்கலாம்.
- திறமையின்மையை இது ஊக்குவிக்கும். அதாவது மறுசீரமைக்கப்பட வேண்டிய திறன்குன்றிய நிறுவனங்களை செயற்கையாக இது பாதுகாக்கக் கூடும். அவசியம் தேவைப்படும் பொருளாதாரச் சீர்திருத்தங்களை இது தாமதிக்கும்.
- மானியக் கொடுப்பனவுகளை ஒதுக்கீடு செய்வதில் நேர்மையின்மையால் ஏற்படும் ஆபத்து

(v)
- நேர்வரிகள், நேரில் வரிகள் என்ற இரண்டிற்குமே வரித்தளமானது மிகக் குறுகியதாகவே இருந்து வந்துள்ளது.
- சமூக நலன் காரணங்களுக்காக பொருளாதாரத்தின் சில பெரிய துறைகளுக்கும் பல்வேறு உற்பத்தி சார்ந்ததும் விற்பனை சார்ந்ததுமான வரிகளினின்றும் விலக்களிக்கப்பட்டுள்ளது.
- வரிச் சட்டங்களிலும் வரி நிர்வாகத்திலும் காணப்படும் குறைபாடுகள் காரணமாகப் பல தனிப்போட்டோரும் தாபனங்களும் வரி செலுத்துவதைத் தவிர்த்துக் கொள்கின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- முதலீட்டையும், ஏற்றுமதி நடவடிக்கைகளையும் ஊக்குவிப்பதற்காகப் பல வரிச்சலுகைகளும் வரிவிடுமுறைகளும் வரி மன்னிப்புக் காலங்களும் அமுல் செய்யப்படுகின்றன.
- பொருளாதார தாராளமயமாக்கல் கொள்கைகள் அறிமுகம் செய்யப்பட்டதன் பின்னர் காலப்போக்கில் வெளிநாட்டு வர்த்தகத்தின் மீதான வரிகளின் சார்புப் பங்களிப்பு குறிப்பிடத்தக்களவு வீழ்ச்சியடைந்துள்ளது.
- வரி நிர்வாகத்தின் வினைத்திறன் குறைவாகக் காணப்படுவதும் வரி சேகரிப்பில் ஊழல்கள், மோசடிகள் அதிகளவில் இடம்பெறலும்.

07. (i)

| நாட்டின் பண நிரம்பல் (Money Supply) | | |
|---|---|---|
| $M_1$ | = | குறுகிய பண நிரம்பல் |
| $M_1$ | = | CP + DDP |
| $M_2$ | = | விரிந்த பண நிரம்பல் |
| $M_2$ | = | $M_1$ + TSDP |
| $M_{2b}$ | = | திரட்டப்பட்ட விரிந்த பண நிரம்பல் |
| $M_{2b}$ | = | $M_1$ + DBU + FCBU |
| $M_4$ | = | விரிந்த பண நிரம்பல் (நாணயக் கூட்டுக்கள்) |
| $M_4$ | = | $M_1$ + DBU + $FCBU_s$ + LSB + FC |
| CP | = | பொதுமக்களிடமுள்ள நாணயம் |
| DDP | = | பொதுமக்களிடமுள்ள கேள்வி வைப்புக்கள் |
| TSDP | = | பொதுமக்களுக்குரித்தாயுள்ள வர்த்தக வங்கிகளிடமுள்ள தவணை மற்றும் சேமிப்பு வைப்புக்கள் |
| DBU | = | தேசிய வங்கி கூறுகள் - பொதுமக்களிடமும் வர்த்த வங்கிகளிடமும் உள்ள தவணை மற்றும் சேமிப்பு வைப்புக்கள் |
| FCBU | = | வெளிநாட்டு நாணய வங்கிக் கூறுகள் |
| LSB | = | உரிமம் பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கி வைப்புகள் |
| FC | = | நிதிக் கம்பனிகளின் வைப்புக்கள் |

(ii) பணவீக்கம்

பொதுவிலைமட்ட அதிகரிப்பு மூன்று வீதத்திற்கு உட்பட்டதாக காணப்படுமாயின் அது பணவீக்கமென வரையறை செய்யப்படாது. ஆண்டுச் சராசரி வளர்ச்சி வீதம் எனப்படும். பொதுவிலைமட்ட அதிகரிப்பு மூன்று வீதத்திற்கு உயர்வாகவும் தொடர்ச்சியாகவும் அமைந்தால் அது பணவீக்கமாகும். பணவீக்க வீதத்தை அடிப்படையாக வைத்து தவழும் பணவீக்கம், நடக்கும் பணவீக்கம், ஓடும் பணவீக்கம், பாயும் பணவீக்கம் என வகைப்படுத்தப்படும்.

மையப் பணவீக்கம்

1975 றொபேட் J. கோர்டன் என்பவரினால் மையப் பணவீக்க எண்ணக்கரு வலியுறுத்தப்பட்டது. முதன்மைப் பணவீக்கத்திலிருந்து அதிகளவு தளம்பலைக் கொண்ட பொருட்களினால் நிர்வாகிக்கப்பட்ட விலைகளை விலக்குவதன் மூலம் பொதுவாக கணிப்பிடப்படுகிறது.

இலங்கைக்கு மையப்பணவீக்கத்தை கணிப்பிட மிகப் பொருத்தமான முதன்மைப் பணவீக்கம் அளவீடக கொழும்பு நுகர்வோர் விலைச்சுட்டெண் உள்ளதோடு விலக்குதல் (கொழும்பு நுகர்வோர் விலைச்சுட்டெண்ணிலுள்ள உணவுப் பொருட்களில் அதிகம் தளம்பல் அடைபவை விலக்கல்) முறை காணப்படுகிறது.

மையப் பணவீக்க அளவீடானது முதன்மைப் பணவீக்க அளவீடுகளில் உள்ள நிறையிடல் உள்ளடக்கம் போன்ற குறைபாடுகளை தீர்க்க பயன்படமாட்டாது.

(iii) வட்டி வீதம், பணநிரம்பல் ஆகியவற்றில் மாற்றங்களை உண்டாக்குவதன் மூலம் கடனுக்கான செலவு, திரவத்தன்மை ஆகியவற்றில் செல்வாக்குச் செலுத்துதல் நாணயக் கொள்வனவு எனப்படும்.

நாணயக் கொள்கைக் கருவிகளாக தொகை ரீதியான கடன் கட்டுப்பாட்டுக் கருவிகள், பண்பு ரீதியான கடன் கட்டுப்பாட்டுக் கருவிகள் ஆகியன பிரதான கருவிகளாகும்.
இது தவிர கடன் கொள்கை ஊடகடத்தல் பொறிமுறை ஒன்றும் காணப்படுகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**நாணயக் கொள்கைகள் கருவிகள்**

- தொகை ரீதியான கடன் கட்டுப்பாட்டுக் கருவிகள்
  - கொள்கை ரீதியான வட்டி வீதம்
    - வங்கி வட்டி வீதம்
    - மீள் கொள்வனவு விகிதம்
    - மீள்விற்பனை விகிதம்
  - சட்ட ரீதியான ஒதுக்கு வீதம்
  - திறந்த சந்தை நடவடிக்கை
- பண்பு ரீதியான கடன் கட்டுபாட்டுக் கருவிகள்
  - கடன் எல்லைகளை நியமித்தல்
  - கடனுக்கான பிணைகளை நிர்ணயித்தல்
  - தெரிவு செய்யப்பட்ட வட்டி வீதங்களை நிர்ணயித்தல்
  - ஊக்குவிப்பு
- நாணயக் கொள்கை ஊடுகடத்தற் பொறிமுறை

(iv) **பணவீக்கத்தினைக் கட்டுப்படுத்த நாணயக் கொள்கையையும் இறைக்கொள்கைகயையும் பயன்படுத்துவதில் எதிர்நோக்கப்படும் பிரச்சினைகள்**

- பகிரங்கச் சந்தை நடவடிக்கைகளை வெற்றிகரமாக மேற்கொள்வதற்கு
- தேவையான வெற்றிகரமான நிதிச் சந்தை காணப்படாமை
- வணிக வங்கிகள் மிகை ஒதுக்குகளை பேணிச் செல்லும் போது
- கடன் பெற்று மேற்கொள்ளப்படும் பொருளாதார நடவடிக்கைகள் அதிக இலாபத்தன்மை உடையதாக அமையும் போது
- கடனுக்கான கேள்வி கட்டுப்பாட்டுக் கருவிகள் பிரயோகிப்பட்ட பின்பும் மாறாததாக அல்லது அதிகரிக்கும் போது.
- பாதீட்டுப் பற்றாக்குறைக்கான நிதியின் ஒரு பகுதியை மத்தியவங்கி வழங்க வேண்டிய கடமைப்பாடு உள்ளது. இந்நிலையில் பாதீட்டுப் பற்றாக்குறை மிக உயர்வாக இருக்கும் போது
- பிரதிப் பணப் பாவனை வளர்ச்சியடைதல்
- வரவு செலவுத்திட்ட கொள்கையை மாற்றியமைக்க முடியாமை
- அரசியல் காரணங்களால் அரச செலவு அதிகரித்துச் செல்லல்
- உற்பத்திப் பெருக்கத்திற்கு உதவாத அதிக செலவினம் இடம்பெறல்
- உற்பத்திப் பெருக்கத்திற்கு பங்கம் விளைவிக்ககூடிய செலவுகள் உதாரணம் : யுத்த செலவுகள்.

(v) **மத்திய வங்கியின் நேர்மாற்று மீள்கொள்வனவு நடவடிக்கைகள் (Reverse repurchase) அழைப்புக்கடன் சந்தை வட்டிவீதங்களில் ஏற்படுத்தும் பாதிப்புக்கள்.**

நேர்மாற்று மீள்கொள்வனவு என்பது உடன்பட்ட ஒரு விலையில் மீண்டும் விற்பனை செய்யப்படும் என்ற உத்தரவாதத்துடன் ஆவணங்களை கொள்வனவு செய்யும் நடவடிக்கையினைக் குறிக்கும்.

- நேர்மாற்று மீள்கொள்வனவு வீதம் என்பது மத்திய வங்கியின் ஓரிரவு கடன் வழங்கல் வீதமாகும். நேர்மாற்று மீள்கொள்வனவு வீதமானது வங்கிகளுக்கிடையிலான அழைப்புக்கடன் சந்தையின் மேலெல்லையாக கருதப்படும்.
- மத்திய வங்கியானது நேர்மாற்று மீள்கொள்வனவு வீதத்தை மாற்றியமைத்தால் அழைப்புக்கடன் சந்தை வீதமும் மாற்றமடையும்.

**வங்கிகளில் கம்பனி ஆளுமைக்கான தேவை**

ஓர் நிறுவனத்தின் பொருளாதார ஆரோக்கியத்துக்காக அதனுடைய கவனிக்கத்தக்க முக்கியத்துவத்தின் காரணமாக கம்பனி ஆளுகையானது பொது மக்கள் நலன்களின் ஓர் சிறந்த செயலாக கவரப்பட்டுள்ளது. இது என்ரோன் மற்றும் வோல்ட்கொம் போன்ற வியாபார உலகை ஆட்டம் காண செய்த 2000களின் ஆரம்பத்தில் நிகழ்ந்த மிகப்பெரிய கம்பனி சீரகுலைவுகள் மற்றும் தோல்விகளை தொடர்ந்து ஓர் உயர்மட்ட முக்கியத்துவத்தை பெற்றுக் கொண்டது.

அதனைத் தொடர்ந்து உலகம் முழுவதிலுமுள்ள நிறுவனங்கள் ஒழுங்குபடுத்துனர்கள் மற்றும் மேற்பார்வையார்கள் பல்வேறு கம்பனி விதிகளை உருவாக்கினர். பல்வேறு காரணங்களுக்காக நவீன பொருளாதாரத்தில் ஏனைய நிறுவனங்களைப் போலல்லாது வங்கிகள் ஓர் விசேட முக்கியத்துவத்தை கொண்டிருக்கிறது எனப்பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்டது.

முதலாவதாக வங்கிகளானது நிதியியல் முறைமையினுடைய கட்டுப்படுத்தும் பகுதியாக காணப்படுவதுடன் வங்கிகளுடைய தோல்விகள், ஓர் பொருளாதாரத்தின் இயைபான செயற்பாட்டிற்கு முக்கியத்துவமுடையதாக காணப்படுகின்ற ஓர் நாட்டின் சேமிப்புக்கள் முதலீடு மற்றும் கொடுப்பனவு சேவைகள் போன்றவற்றின் செயற்பாடுகிள் தாக்கத்தை உண்டு பண்ணும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(v) பணப்பெருக்கி என்பது பணநிரம்பலுக்கும் உயர்வலுப்பணத்திற்கும் இடையிலான விகிதமாகும்.

$$\text{பணப் பெருக்கி} = \frac{\text{பணநிரம்பல்}}{\text{அடிப்படைப்பணம்}}$$

$$K = \frac{M}{H}$$

உயர்வலுப்பணத்தொகையை பணப்பெருக்கியினைக்கொண்டு பெருக்கி பணநிரம்பலை பெற்றுக்கொள்ளலாம்.

பணப்பெருக்கியில் செல்வாக்குச் செலுத்தும் காரணிகள்

- சட்ட முறைப் பண இருப்பு (C)
- மிகை ஒதுக்கு விகிதம் (E)
- சட்டமுறையான ஒதுக்கு விகிதம் (R)

$$\text{நாணயத்தாள்} = \frac{\text{பணநிரம்பல்}}{\text{பணப்பெருக்கி}}$$

நாணயத்தளம் என்பது மத்திய வங்கியின் முக்கியமான நேரடி நாணயப் பொறுப்புக்களைக் குறிக்கும்.

$$\text{மொத்தத்தேசிய உற்பத்தி சுருக்கம்} = \frac{\text{குறித்த வருடத்தில் நடைமுறை விலையில் மொத்த உள்நாட்டு உற்பத்தி}}{\text{குறித்த வருடத்தில் நிலையான விலையில் மொத்த உள்நாட்டு உற்பத்தி}}$$

08. (i) அ. இலங்கையின் பணவீக்கத்தினை அளக்கும் அளவைகள்

- கொழும்பு நுகர்வோர் விலைச்சுட்டெண்
- கொழும்பு நுகர்வோர் விலைச்சுட்டெண் (புதியது)
- மொத்த விற்பனை விலைச்சுட்டெண்
- கொழும்பு மாவட்ட நுகர்வோர் விலைச்சுட்டெண்
- இலங்கை நுகர்வோர் விலைச்சுட்டெண்
- மொத்த உள்நாட்டு உற்பத்தியின் அல்லது மொத்தத் தேசிய உற்பத்தியின் சுருக்கி

ஆ. சுற்றோட்டத்திலுள்ள நாணய அதிகரிப்பில் செல்வாக்குச் செலுத்தும் இரு பிரதான காரணிகள்

1. பணவீக்கம்
2. பொருளாதார வளர்ச்சி வீதம்

இ. பணவீக்கத்தை ஆய்வு செய்யும் அணுகுமுறைகள்

- கேள்வித் தூண்டல் பணவீக்கம்
- செலவுத் தூண்டல் பணவீக்கம்
- அமைப்பு ரீதியான பணவீக்கம்

(ii) பொது விலைமட்டம் தொடர்ச்சியாக அதிகரித்துச் செல்லுமாயின் அதுவே பணவீக்கம் எனப்படும்.

ஒரு நாட்டின் குறித்த தொகை நாணயங்களைக் கொண்டு உள்நாட்டில் வாங்கக்கூடிய பொருட்கள், சேவைகளினளவே பணத்தின் உள்நாட்டு பெறுமதியாகும்.

பணத்தின் உள்நாட்டுப் பெறுமதியைப் பொது விலைமட்டம் தீர்மானிக்கும்.

பொது விலைமட்ட மாற்றத்திற்கும், பணத்தின் உள்நாட்டு பெறுமதி மாற்றத்திற்குமிடையே எதிர்க்கணியத் தொடர்பு காணப்படுகிறது.

ஏற்றுமதி

பணவீக்கம் ஏற்படுமாயின் உள்நாட்டில் உற்பத்திச் செலவு அதிகரிக்கும். ஆகவே ஏற்றுமதிகளின் விலைகள் அதிகரிக்கும். ஆகவே போட்டித்தன்மை குறைந்து ஏற்றுமதிக்கான கேள்வி குறைந்து ஏற்றுமதி வருமானம் வீழ்ச்சியடையும்.

இறக்குமதி

பணவீக்கம் காரணமாக உள்நாட்டு உற்பத்திச் செலவு அதிகரித்து பொருட்களின் விலைகள் அதிகரிப்பதால் தற்போது இறக்குமதி இலாபகரமானதாக அமைய இறக்குமதிக்கான கேள்வி அதிகரித்து இறக்குமதிச் செலவு அதிகரிக்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**சென்மதி நிலுவை, நாணயமாற்று வீதம், பணத்தின் புறப் பெறுமதி**

ஏற்றுமதி வருமானம் வீழ்ச்சியடைவதாலும் இறக்குமதிச் செலவு அதிகரிப்பதாலும் சென்மதிநிலுவை பாதகமாக மாறும். நாணயமாற்று விகிதம் தேய்வடையும். ஆகவே பணத்தின் புறப்பெறுமதி வீழ்ச்சியடையும்.

உள்நாட்டு உற்பத்திச் செலவு அதிகரிப்பு, உள்நாட்டு உற்பத்தி வீழ்ச்சி, ஏற்றுமதி வீழ்ச்சி, இறக்குமதி அதிகரிப்பு, இவை காரணமாகப் பேரினப் பொருளாதார மாறிகள் பாதக நிலையை அடையும்.

அதாவது வேலையின்மை அதிகரிக்கும் வருமான ஏற்றத்தாழ்வு அதிகரிக்கும், வளப்பயன்பாட்டின் செயற்றிறனின்மை அதிகரிக்கும். பொருளாதார வளர்ச்சி உறுதி, அபிவிருத்தி என்பவற்றில் பாதகமான விளைவுகளை உண்டு பண்ணும்.

ஆகவே பணவீக்கமானது பேரினப் பொருளாதாரரமாறிகளில் பாதகத் தன்மையை உண்டாக்கும்.

குறிப்பு: குறித்த நாட்டினது பணவீக்கமானது அதன் வர்த்தகப் பங்காளி நாடுகளுடைய பணவீக்கத்தை விட உயர்வாக அமைந்திருக்கும் நிலையிலேயே மேற்கூறிய விளைவுகள் ஏற்படும்.

(iii) பொருளாதார உறுதிப்பாடு, விலை உறுதிப்பாடு, நிதிக் கொள்கையின் நிலைபேற்றுத்தன்மை போன்ற நோக்கங்களை அடைவதற்காக வட்டி விகிதம், பணநிரம்பல் என்பவற்றின் மீது தாக்கத்தை ஏற்படுத்துவதற்காக பணக்கருவிகளை செயற்படுத்தும் செயற்பாடே பணக்கொள்கை எனப்படும்.

**பணக்கொள்கையைச் செயற்படுத்துவதற்கான நோக்கங்கள்**

1. செயற்பாட்டு நோக்கம் - உயர் வலுப் பண அளவு
2. இடையீட்டு நோக்கம் - வட்டி மற்றும் பண நிரம்பல்
3. இறுதி நோக்கம் - விலை மற்றும் நிதியமைப்பின் உறுதி

(iv) வணிக வங்கியானது கேள்வி வைப்புகளினூடாகத் தன்னிடமுள்ள வைப்புக்களின் அளவைவிடப் பன்மடங்கு கடன்வழங்கும் ஆற்றலைக் கடனாக்கம் எனக் குறிப்பிடப்படும்.

வணிக வங்கிகள் மட்டுமே கடனாக்கம் செய்ய முடியும் ஏனெனில் அவற்றில் மட்டுமே கேள்வி வைப்புகள் காணப்படும்.

**கடனாக்கத்தினை வரையறை செய்யும் காரணிகள்**

1. வணிக வங்கிகளிடமுள்ள மக்களின் பண வைப்புக்களின் அளவு
2. காசு ஒதுக்கு வீதத்தின் அளவு
3. மத்திய வங்கியின் கடன் கட்டுப்பாட்டு நடவடிக்கைகள்
4. கடனுக்கான கேள்வி
5. பணத்துக்கான கேள்வியின் அளவு

(v) **நிதியமைப்பின் நிறைபேறான தன்மை முக்கியத்துவம் பெறுவதற்கான காரணங்கள்:**

- நிதி நிறுவனங்கள் மற்றும் நிதிச் சந்தைகள் வினைத்திறனுடன் செயலாற்றுவதற்காக
- சொத்துக்களின் விலைகளை உறுதிப்படுத்துவதற்காக
- சென்மதி நிலுவைப் பிரச்சினையைத் தவிர்த்துக் கொள்வதற்காக
- சந்தையின் திரவத் தன்மையைப் பேணுவதற்காக

(v) **ஒரு நாட்டின் உள்வாரியான உறுதிப்பாட்டினை ஏற்படுத்தும் நோக்கிலான கொள்கைத் திட்டமிடலின் போது கவனத்தில் கொள்ள வேண்டிய விடயங்கள்:**

பொது விலை மட்டத்தில் தாக்கத்தை ஏற்படுத்தக் கூடிய கேள்விப்பக்க காரணிகளும் நிரம்பல் பக்கக் காரணிகளும் கவனத்தில் கொள்ளப்படும்.

09. (i) **சர்வதேச வர்த்தகத்தினால் கிடைக்கும் நன்மைகள்**

1. நிலையான நன்மைகள்
2. மாற்றமடையும் நன்மைகள்

நிலையான நன்மைகள் என்பவை உற்பத்தி மற்றும் நுகர்வை அடிப்படையாகக் கொண்டு ஏற்படும் நன்மைகளாகும் இது இரு பிரிவாக பிரிக்கப்படும்.

அ. சிறப்புத் தேர்ச்சி மூலமான நன்மைகள்

ஆ. பரிமாற்றத்தின் மூலமான நன்மைகள்

மாற்றமடையும் நன்மைகள் என்பது சர்வதேச வர்த்தகத்தில் ஈடுபடும் போது ஏற்றுமதி விலை, வர்த்தக விகித வேறுபாடு போன்ற பல்வேறு காரணிகளின் செல்வாக்கினால் ஏற்படுகின்ற நன்மைகளைக் குறிக்கும்.

உதாரணம் :- தொழில்நுட்பம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(ii) சுதந்திர வர்த்தகம் என்பது நாடுகளுக்கிடையே பொருட்கள், சேவைகள் காரணிகள் ஆகியவற்றை சுதந்திரமாக அசைவதற்கு அனுமதிக்கப்பட்ட நிலைமையினையே குறிக்கும்.

சுதந்திர வர்த்தகத்திற்கு தடையாக உள்ள காரணிகள்

- வர்த்தக ஒப்பந்தங்கள்
- சர்வதேச வர்த்தக பாதுகாப்பு நடவடிக்கைகள்
- அரசியல் முறுகல் நிலைமைகள்

(iii)
- பிரான்ஸ், இங்கிலாந்து ஆகிய நாடுகள் காணப்படுகின்றன.
- இரு நாடுகளும் கோதுமை, துணி ஆகிய உற்பத்திகளைச் செய்வதற்கு தங்களிடமுள்ள வளங்களை செயற்றிறனுடன் பயன்படுத்தி ஒரு அலகு உள்ளீட்டிற்கான வெளியீடுகளை அட்டவணை காட்டுகிறது.

| பொருள் | பிரான்ஸ் | இங்கிலாந்து |
|---|---|---|
| கோதுமை (கி. கிராமில்) | 20 | 10 |
| துணி (மீற்றரில்) | 10 | 08 |

- இங்கு இரு உற்பத்திகளிலும் பிரான்ஸ் முழு நன்மையைக் கொண்டுள்ளது. ஆகவே, முழு நன்மைக் கோட்பாட்டினடிப்படையில் நாடுகள் செயல்பட முடியாது.
- ஒப்பீட்டு அனுகூலக் கோட்பாட்டின் படி செயற்பாட்டு நாடுகள் தம்முடைய நுகர்வு மட்டத்தை உயர்த்திக் கொள்ளலாம்.

அமையச் செலவுகள்

| | பிரான்ஸ் | இங்கிலாந்து |
|---|---|---|
| கோதுமை (கி. கிராமில்) | 0.5 மீற்றர் துணி | 0.8 மீற்றர் துணி |
| துணி (மீற்றரில்) | 2 கிலோகிராம் கோதுமை | 1.25 கிலோகிராம் கோதுமை |

- கோதுமை உற்பத்தியில் பிரான்ஸிற்கு ஒப்பீட்டு நன்மையுள்ளது. (ஒப்பீட்டு ரீதியில் கோதுமைக்கான அமையச் செலவு பிரான்ஸிற்கு குறைவு)
- துணி உற்பத்தியில் இங்கிலாந்திற்கு ஒப்பீட்டு நன்மையுள்ளது. (ஒப்பீட்டு ரீதியில் துணிக்கான அமையச் செலவு இங்கிலாந்திற்குக் குறைவு)
- இரு நாடுகளிலும் 10 அலகு உள்ளீடுகள் உள்ளதெனக் கருதுக.
- இரு நாடுகளும் இரு உற்பத்திகளுக்கும் சம அளவில் வளங்களை ஒதுக்கீடு செய்கின்றன.
- இரு நாடுகளும் ஒப்பீட்டு நன்மையடிப்படையில் செயற்படவில்லை.
- சர்வதேச வர்த்தகம் இரு நாடுகளுக்கிடையில் இடம்பெறவில்லை.

தற்போதைய வெளியீட்டு மட்டம்

| | பிரான்ஸ் | இங்கிலாந்து | உலக உற்பத்தி |
|---|---|---|---|
| கோதுமை (கி. கிராமில்) | 100 | 50 | 150 |
| துணி (மீற்றரில்) | 50 | 40 | 90 |

- இரு நாடுகளும் 10 அலகு உள்ளீடுகள் உள்ளதெனக் கருதுக.
- ஒப்பீட்டு நயக் கோட்பாட்டினடிப்படையில் நாடுகள் செயற்படுகின்றன.
- பிரான்ஸ் தான் ஒப்பீட்டு நன்மை கொண்டுள்ள கோதுமை உற்பத்திக்கு 8 அலகு உள்ளீடுகளையும் ஒதுக்கீடு செய்கிறது.
- இங்கிலாந்து தான் ஒப்பீட்டு நன்மை கொண்டுள்ள துணி உற்பத்திக்கு 10 அலகு உள்ளீடுகளையும் (உள்ளீடுகள் முழுவதையும்) ஒதுக்கீடு செய்கிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒப்பீட்டு நன்மையினடிப்படையில் செயற்படுமாயின் வெளியீடு மட்டங்கள்

| | பிரான்ஸ் | இங்கிலாந்து | உலக உற்பத்தி |
|---|---|---|---|
| கோதுமை (கி. கிராமில்) | 160 | 00 | 160 |
| துணி (மீற்றரில்) | 20 | 80 | 100 |

- ஒப்பீட்டு நன்மையின் அடிப்படையில் செயற்பட்டதால் உலக உற்பத்தி அதிகரித்துள்ளது. (10kg கோதுமையினளவாலும் 10M துணியினளவாலும்)
- நாடுகள் பரிமாற்றத்திலீடுபடுவதன் மூலம் தமது நுகர்வு மட்டத்தை உயர்த்திக் கொள்ள முடியும்.
- பிரான்ஸ் 50Kg கோதுமைக்காக இங்கிலாந்தின் 35m துணியினை பரிமாற்றம் செய்கின்றது.

தற்போது நாடுகளின் நுகர்வு மட்டம்

| | பிரான்ஸ் | இங்கிலாந்து | உலக உற்பத்தி |
|---|---|---|---|
| கோதுமை (கி. கிராமில்) | 110 | 50 | 160 |
| துணி (மீற்றரில்) | 55 | 45 | 100 |

பிரான்ஸின் நுகர்வு மட்டம் 10Kg கோதுமையாலும் 5m துணியினாலும் அதேவேளை இங்கிலாந்தின் நுகர்வு மட்டம் 5m துணியினால் அதிகரித்துள்ளது.

ஒப்பீட்டு நன்மையின் அடிப்படையில் நாடுகள் செயற்பட்டு அவற்றின் நுகர்வு மட்டம் உயர்ந்துள்ளதை மேலே தெளிவுபடுத்தப்பட்டுள்ளது.

- இரு நாடுகளுக்கும் இரு உற்பத்திகளும் அவசியமானவையாக இருத்தல்
- அவற்றை தடைகளின்றி பரிமாற்றிக் கொள்ள முடிதல்
- அமையச் செலவு வேறுபட்டால் கிடைக்கும் நன்மைகளை இல்லாதொழிக்கும் எந்த சூழ்நிலைகளிலும் இல்லாதிருத்தல்

  உதாரணம் : அமையச் செலவு வேறுபட்டால் கிடைக்கும் நன்மையை விட போக்குவரத்துச் செலவு உயர்வாக இருத்தல்
- போதிய சந்தை வாய்ப்பிருத்தல்

(iv) சென்மதி நிலுவைச் சமநிலை பற்றிய முடிவை சென்மதி நிலுவை அட்டவணையொன்றின் மொத்தக் கணக்கு மீதியிலிருந்து பெற்றுக்கொள்ளலாம்.

சென்மதி நிலுவை அட்டவணையில் மொத்தக் கணக்குமீதி மிகையாக அல்லது பற்றாக்குறையாக அமைந்து காணப்படுமாயின் அதுவே சென்மதி நிலுவைச் சமநிலையின்மை எனப்படும்.

சென்மதி நிலுவை மிகையொன்றின் பொருளாதார விளைவுகளாக இருக்கக்கூடியவை

- வெளிநாட்டு சொத்துக்கள் (ஒதுக்குகள்) அதிகரித்தல்
- இறக்குமதிகளுக்கான வெளிநாட்டு சொத்தின் (ஒதுக்கின்) போதுமான கால அளவு நீடிக்கும்.
  - பண நிரம்பலின் விரிவாக்கத் தாக்கம் ஏற்படல்
  - வெளிநாட்டு நாணயமாற்று விகிதம் உயர்வடைதல்
  - பணவீக்கத்திற்கு வழியேற்படல்
  - ஏற்றுமதிப் போட்டித்தன்மை பலவீனமடைதல்

சென்மதி நிலுவை பற்றாக்குறையொன்றின் பொருளாதார விளைவுகளாக இருக்கக்கூடியவை

- வெளிநாட்டு சொத்துக்கள் (ஒதுக்குகள்) குறைவடைதல்
- பாதுகாப்புவாதக் கொள்கை நோக்கி ஈடுபாடு கொள்ளல்
- பண நிரம்பலில் சுருக்க விளைவுகள் ஏற்படல்
- வெளிநாட்டுக் கடன் உயர்வடைதல்
- நாணயமாற்று விகிதம் தேய்வடைதல்

(v) சென்மதி நிலுவை பற்றாக்குறையினை நிதியீட்டம் செய்வதற்கான முறைகள்

- நடைமுறைக் கணக்குப் பற்றாக்குறையை நிதியீட்டம் செய்வதற்கு மூலதன மற்றும் நிதியியல் கணக்கிலுள்ள வளங்களைப் பயன்படுத்தல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- முழு மொத்த பற்றாக்குறையை நிதியீட்டம் செய்வதற்கு நீண்டகால நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.
  - வெளிநாட்டு முதலீடுகளைப் பெற்றுக் கொள்ளல்
  - இறக்குமதிப் பதிலீடு
  - விகித முறை
  - நாணய மாற்று வீத மதிப்பிறக்கம்
  - ஏற்றுமதிப் பன்முகப்படுத்தல்

(vi) குறித்த ஒரு நாட்டின் பல்வேறு குழுவினரிடையே அல்லது சர்வதேச குழுவினரிடையே தீர்வை வரி மற்றும் வரியல்லாத காரணிகள் எதுவுமற்ற பொருட்கள், சேவைகள் மற்றும் உற்பத்திக் காரணிகள் பரிமற்றப்படும் செயன்முறையே பொருளாதார ஒருங்கிணைப்பு எனப்படும்.

பொருளாதார ஒருங்கிணைப்பின் பல்வேறு கட்டங்கள்

1. முன்னுரிமை வர்த்தக ஒப்பந்தம் (PTA)

   உதாரணங்கள் :
   - ஐரோப்பிய பொருளாதார ஒப்பந்தம்
   - இந்திய - ஆப்கானிஸ்தான் முன்னுரிமை வர்த்தக ஒப்பந்தம்
   - வட அமெரிக்கா வர்த்தக ஒப்பந்தம்.

2. சுதந்திர வர்த்தகப் பிரதேசம் (FTA)

   உதாரணங்கள் :
   - ஆபிரிக்க சுதந்திர வர்த்தகப் பிரதேசம் (AFAA)
   - ஆசிய - பசுபிக் சுதந்திர வர்த்தகப் பிரதேசம் (AFTA)
   - மத்திய ஐரோப்பிய சுதந்திர வர்த்தகப் பிரதேசம் (CEFTA)
   - வட அமெரிக்கா சுதந்திர வர்த்தகப் பிரதேசம் (NADTA)

3. சுங்கச் சங்கம் (CU)

   உதாரணங்கள் : மத்திய அமெரிக்க பொதுச் சந்தை
   - அன்டீஸ் சமூகம்
   - கரிபியன் சமூகம்
   - வட அமெரிக்கா சமூகம்

4. பொதுச் சந்தை (CM)

   உதாரணங்கள் : கரிபியன் சமூக பொதுச் சந்தை (CARICOM)
   - மத்திய அமெரிக்கா பொதுச் சந்தை (CACM)
   - மத்திய ஆபிரிக்கா பொருளாதார மற்றும் நிதிச் சமூகம் (CEMAL)

5. பொருளாதார மற்றும் நிதிச் சங்கம் (EU & FM)

   உதாரணங்கள் :
   - மத்திய ஆபிரிக்கா பொருளாதார நிதிச் சங்கம்
   - மேற்கு ஆபிரிக்கா பொருளாதார நிதிச் சங்கம்
   - ஐரோப்பியா நாணய மற்றும் பொருளாதார சங்கம்

6. முழுமையான பொருளாதார ஒருங்கிணைப்பு (FI)

10. (i) அறிவுப் பொருளாதாரம்

பொருளாதார வளர்ச்சியின் மிக முக்கிய உந்து சக்தியாக பொருளாதார வளர்ச்சிக்கு பொருட்கள் சேவைகளின் உற்பத்திக்குப் பயன்படும் அறிவு மாறியுள்ளமையை குறிக்கிறது.

மூலதனம், ஊழியம் போன்ற காரணிகளைப் பின்தள்ளிவிட்டு பொருளாதாரத்துக்கு உதவுகின்ற அறிவு மிக முக்கிய இடத்தைப் பெற்றுள்ளமையை இது குறிக்கிறது.

பொருளாதார வரலாற்றை எடுத்து நோக்கும் போது ஒவ்வொரு கால கட்டத்திலும் வேறுபட்ட காரணிகள் செல்வாக்குப் பெற்று இருந்தமையைக் காணமுடிகிறது. இன்று அறிவுப் பொருளாதாரம் என்று அழைக்கப்படுவது இதில் ஏற்பட்ட மாற்றத்தையே குறித்து நிற்கிறது.

பொருளாதார வளர்ச்சிக்கு உதவுகின்ற அறிவு சிந்தனை ஆராய்ச்சி, புதுப்புதுக் கண்டுபிடிப்புகள், உளப்பாங்கு போன்ற அனைத்து விடயங்களையும் அறிவுப் பொருளாதாரம் உள்ளடக்குகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொருளாதார வளர்ச்சியின் போது சேவைத் துறையின் முக்கியத்துவம் மிகவும் அதிகரிப்பது அறிவுப் பொருளாதாரமாக மலர்வதற்கான பின்புலத்தைத் தந்துள்ளது எனலாம்.

(ii)
- வேலையின்மை வீழ்ச்சியடைதல்
- வறுமை நிலை குறைவடைதல்
- வருமானப் பரம்பல் சமமின்மை குறைவடைதல்
- சுற்றாடல் தரம் பாதுகாப்பு
- கல்வி மற்றும் சுகாதாரத்துறையில் முதலீடு அதிகரித்தல்
- நல்லாட்சி

(iii) ஒரு தொகைப் பொருட்களைக் கொள்வனவு செய்யப் பயன்படுகின்ற இரு வேறு நாட்டு நாணயங்களின் அளவுகள் ஒன்றுக்கொன்று சமனானவை எனக் கொள்வனவு ஆற்றல் அடிப்படையில் இரு நாட்டு நாணயங்களின் பெறுமதியினை மதிப்பீடு செய்யும் முறையாக இது காணப்படுகிறது.

நாணயமாற்று முறையில் காணப்பட்ட பல்வேறு குறைபாடுகளை நீக்கும் ஒரு முறையாக இது கருதப்படுகிறது.

(iv) கிராம மற்றும் பின்தங்கிய பிரதேசங்களில் சிறந்த உட்கட்டமைப்பு மற்றும் சந்தை வசதிகளை ஏற்படுத்தல் (மக நெகும, கமநெகும, கிராம மின்விநியோகம்.

தோட்டச் செய்கை தவிர்ந்த விவசாயத்துறையை விருத்தி செய்தல் (உரமானியம் நெல் சந்தைப்படுத்தும் நடைமுறை, பாற் பண்ணையாளர்களுக்கு உதவுதல் - கிரி கம்மான, விவசாய உற்பத்தி வலயங்கள் போன்றன.
பிராந்திய கைத்தொழில் மயமாக்கல் திட்டம்

கொழும்பு, கம்பஹா மாவட்டம் தவிர்ந்த ஏனைய மாவட்டங்களில் 300 தொழிற்சாலைகளை ஆரம்பித்தல், ஒவ்வொரு பிரதேச செயலாளர் பிரிவிலும் குறைந்தபட்சம் ஒரு தொழிற்சாலையை நிறுவுதல்)
சிறிய மற்றும் நடுத்தரத் தொழில் முயற்சிகள் - SME வங்கியைத் தாபித்தல்

உயர்கல்வி வழங்குவதில் பிராந்திய சமத்துவத்தைப் பேணும் நோக்கில் 2005 ஆம் ஆண்டில் ஊவாவெல்லஸ்ஸ பல்கலைக்கழகத்தைத் தாபித்தமை

மாகாண மட்டத்தலான அபிவிருத்தித் திட்டங்கள் (புபுது வெல்லஸ்ஸ, ரஜரட்ட நவோதய, செங்கடகல, ருகுண அபிவிருத்தி, தஹஸக் மஹிவெவ்)

தேசிய அபிவிருத்திச் செயற்பாட்டில் புத்தாயிரமாண்டு இலக்குகளை உள்வாங்கியமை, நுண்கடன் வழங்கும் வசதிகளைப் பலப்படுத்திமை

(v)
- சிசுமரண வீதத்தைக் குறைத்தல்
- இரண்டாம் நிலை மற்றும் மூன்றாம் நிலைக் கல்வியில், ஆண் : பெண் (பால்) வேறுபாடுகளைக் குறைத்தல்.
- சுகாதார சேவைகளைப் பெற்றுக்கொள்ள முடியாத குடும்பங்களின் சதவீதத்தைக் குறைத்தல்
- மலேரியாவினால் மரணிக்கும் எண்ணிக்கைகளைக் குறைத்தல்
- சுத்தமான குடிநீரைப் பெற்றுக்கொள்ள முடியாத குடும்பங்களின் சதவீதத்தைக் குறைத்தல்.

(vi) ஒரு நாட்டினுடைய மெய்த்தேசிய உற்பத்தி நீண்டகால அடிப்படையில் தொடர்ச்சியாக அதிகரித்துச் செல்லலே பொருளாதார வளர்ச்சி எனப்படும்.

பொருளாதார வளர்ச்சியானது பிரதானமானதொரு பேரினப் பொருளாதார இலக்காக அமைவதற்கான காரணங்கள்

- பொருளாதார வளர்ச்சியை ஏற்படுத்துவதன் மூலம் வேலைவாய்ப்புக்களை அதிகரிக்க முடிதல்.
- மெய் உற்பத்தியை அதிகரிக்க முடிதல்
- மக்களின் வருமானத்தை அதிகரிக்க முடிதல்
- அரச வருமானத்தை அதிகரிக்க முடிதல்
- மக்களின் வாழ்க்கைத்தரத்தை அதிகரிக்க முடிதல்
- விலை உறுதிபாட்டை ஏற்படுத்த முடிதல்
- ஏற்றுமதிகள் அதிகரித்து சென்மதி நிலுவையை முன்னேற்ற முடிதல்
- பொதுப்பொருட்கள், சமூக நலப்பொருட்களை வழங்கக்கூடிய அரசின் ஆற்றலை அதிகரிக்க முடிதல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(vii)அ. இலங்கை கல்வி முறையில் உள்ள குறைபாடுகள்

1. பொருளாதார வளர்ச்சிக்கு ஆக்கப் பூர்வமான பங்களிப்பைச் செய்யாமை
2. தொழில்சார் கல்விக்குப் போதுமான முக்கியத்துவம் கொடுக்கப்படாமை.
3. தொழில்சார் நிபுணர்களை போதியளவில் உருவாக்காமை
4. உலகமயமாக்கலின் நன்மையைப் பெறக்கூடிய வகையில் கல்வி முறைமை அமையாமை
5. இலங்கையின் பொருளாதாரக் கொள்கைக்கும் கல்வி முறைமைக்கும் இடையில் பாரிய இடைவெளி காணப்படல்.
6. உளவியல் ரீதியான பாதிப்புக்களை உருவாக்கல்
7. உயர்கல்வி கற்றோரிடம் அதிகளவு வேலையின்மை காணப்படல்
8. உயர்கல்வியை பூர்த்தி செய்வோரின் எண்ணிக்கை குறைவு
9. கல்வி முறைச் சீர்திருத்தங்களிற்காகப் பெற்றுக் கொள்ளப்பட்ட நிதிகள் மிகச் சிறந்த முறையில் பயன்படுத்தப்படாமையும் அதன் தாக்கங்களும்
10. அரசியற் தலையீடுகள்
11. ஆங்கில மொழியறிவு போதியளவு வளர்க்கப்படாமை

ஆ. சிறந்த கல்வி முறையால் நாடு அடையக் கூடிய பயன்பாடுகள்

1. தரமான ஊழியப்படை உருவாகும்.
2. உற்பத்தித் திறன் அதிகரிக்கும்
3. வேலையின்மை நிலைகள் குறைவடையும்
4. தங்கி வாழ்வோர் குறைவடைவர்
5. ஊழிய நெகிழ்ச்சித்தன்மை அதிகரிக்கும்
6. மனித மூலதனம் விருத்தியாகும்.
7. ஆயுட்கால வருமானம் அதிகரிக்கும்
8. பொருளாதார வளர்ச்சிக்கு அனுகூலமாக அமையும்.
9. உற்பத்தி, வருமானம், நுகர்வு வாழ்க்கைத் தரம் என்பன உயர்வடையும்.
10. தனிமனித அமைதியும் சமூக அமைதியும் ஏற்படும்.
11. முதலீடுகள் கவரப்படும்.
12. தங்கி வாழும் நிலைகள் குறைவடையும்
13. வறுமை நிலைகள் குறைவடையும்
14. சமூக அபிவிருத்தி ஏற்படும்.

இ. புத்தாண்டு அபிவிருத்தி இலக்குகள்

- கடும் வறுமை மற்றும் பட்டினியை ஒழித்தல்
- அனைவருக்கும் ஆரம்பக் கல்வி
- பால்நிலை சமத்துவத்தினையும் மகளிர் வலுவூட்டலையும் ஊக்குவித்தல்
- சிறுவர் மரணத்தைக் குறைத்தல்
- கர்ப்பிணிகள் சுகநலத்தை முன்னேற்றல்
- எச்.ஐ.வீ, எயிட்ஸ், மலேரியா மற்றும் ஏனைய நோய்களை ஒழித்தல்
- சுற்றுச் சூழலில் நிலைபேறான தன்மையை உறுதி செய்தல்
- அபிவிருத்திக்காக உலகப் பங்காளிகளை உருவாக்கல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொருளியல் எதிர்பார்க்கை வினாக்கள் | 21 | T | II

## கல்விப் பொதுத்தராதரப்பத்திர (உயர்தர) எதிர்பார்க்கை வினாக்கள்

ஆக்கம் : எஸ். ஸ்ரீராம் B.A (Econ) (PGDE)
Economics Teacher C.C Tamil M.V Puwakpitiya
( T.p: 077-1611571, www. Economics sri raam )
www. ecraam.blogspot.com

**01.** 1. பொருளியல் ஓர் அனுபவம் சார்ந்த விஞ்ஞானமாகும் விளக்குக. உமது விடைக்கான நியாயம் காட்டுக.

2. இலங்கையினை சமூக சந்தை பொருளாதாரமாக கருதமுடியுமா? உமது விடைக்கான நியாயம் தருக?

3. அ) பொருளாதார அமைப்புக்களில் காணப்படும் பொதுவான பண்புகள் யாவை?

ஆ) பொருளாதார முறைமையொன்றின் நிறைவுக் கல்வியை அளவீடு செய்வதற்கான நியமங்கள் இரண்டைக் குறிப்பிடுக.

4. அ) பொருளாதார சுதந்திரம் தொடர்பான நியமங்கள் இரண்டைக் குறிப்பிடுக.

ஆ) அமைய செலவு போக்குகளுக்கும் உற்பத்தி சிக்கனங்களுக்கிடையிலான தொடர்பை விளக்குக.

5. அ. அமையச் செலவு வளையி, உற்பத்திச் செலவு என்பவற்றுக்கிடையிலான தொடர்பை வரிப்படத்தின் துணையுடன் விளக்குக.

ஆ. பொருளியல் கற்கையின் முக்கியத்துவம் நான்கைத் தருக.

**02.** 1. கேள்வி கோட்பாட்டையும் கேள்வி விதியையும் வேறுபடுத்திக் காட்டுக.

2. அ) "குறித்த பண்டத்தின் விலை வீழ்ச்சி நுகர்வோன் மிகையினை அதிகரிக்கச் செய்யும். அதில் புதிய நுகர்வோரும் ஏற்கனவே உள்ள நுகர்வோனும் பங்கேற்கின்றனர்" இதனை வரைபடத்தின் துணையுடன் விளக்குக.

ஆ) புறநடைக் கேள்வி ஏற்படும் சந்தர்ப்பங்கள் நான்கைக் குறிப்பிடுக.

3. பொது பொருட்கள், பொது சொத்துரிமை வளங்கள் என்பவற்றை வேறுபடுத்துக.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

4. அ. குறிப்பிட்ட சந்தர்ப்பத்தில் தரித்த பொருளின் விற்பனைத் திட்டத்தை நிர்ணயிப்பவை யாவை?

ஆ. அரசின் நிரம்பல் தொகை குறைவடையக் காரணத்தையும் அரசின் நிரம்பல் குறைவடையக் காரணமாக அமையக்கூடியவற்றைத் தருக.

5. உற்பத்தி நிறுவனத்தின் வினைதிறன், ஒதுக்கீட்டுச் செயற்றிறன் ஆகிய எண்ணக்கருக்களை வேறுபடுத்துக.

6. அ. நீண்டகால சராசரி செலவுவளையியின் மூன்று பண்புகளைத் தருக.

ஆ. குறுக்குக்கேள்வி நெகிழ்ச்சியின் முக்கியத்துவத்தை நடைமுறை உதாரணங்கள் இரண்டைக் கொண்டு விளக்குக.

**03.** 1. அ. மொத்த நிலையான செலவு அடங்கும் நான்கு உருப்படிகளை தருக.

ஆ. சந்தைக் கட்டமைப்புகளின் பண்புகளின் அடிப்படையில் அவற்றின் பண்புகள் நான்கை குறிப்பிடுக.

2. அ. நிறைபோட்டி நிறுவனம் நீண்டகாலத்தில் சாதாரண இலாபம் உழைக்கும் என்பதை ஏற்பீரா? சிலுரிமையின் சந்தையின் பண்புகள் எவை?

ஆ. நிறைபோட்டிச் சந்தையில் உள்ள அங்கத்தவர் நடைமுறையில் இரு உதாரணம் தருக.

3. அ. பொருளியலில் வேறுபடும் குறுங்கால, நீண்டகால செலவுகளை வேறுபடுத்துக.

ஆ. நிரம்பல் தொழிற்பாட்டை வரைவிலக்கணப்படுத்துக.

4. பின்வருவன பூரண போட்டிச் சந்தையில் ஏற்படுத்தும் மாற்றங்களைத் தருக.

அ. போட்டி அளிப்பு பொருளின் விலை வீழ்ச்சி

ஆ. கூட்டுப்பொருளின் விலையில் ஓர் எழுச்சி

5. கேள்வி நெகிழ்ச்சி, நிரம்பல் நெகிழ்ச்சி என்பவற்றை நிர்ணயிக்கும் காரணிகளைத் தருக.

6. அ. நுகர்வோர் மிகை ஏற்படும் இரு சந்தர்ப்பங்களைத் தருக.

ஆ. குறித்த பண்டத்தின் தொழிற்பாடு வருமாறு
$Qd = 120 - 15P$
இங்கு நுகர்வோர் மிகை உச்சமாக அமையும் போது கேள்வி தொகையின் அளவு யாது?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**04.** 1. அ) தேசிய கணக்கீட்டின் முக்கியத்துவத்தை குறிப்பிட்டு அக்கணிப்பீட்டிலுள்ள குறைபாடுகள் நான்கை தருக.

ஆ) பல்கணிப்பீட்டின் தவறு என்றால் என்ன? அவற்றை நீக்கும் வழிமுறைகளைத் தருக.

2. தேசிய கணிப்பீட்டுடன் தொடர்புபடுத்தி பின்வரும் கூற்றுக்களை ஆராய்க.

அ) பெண்களின் பங்களிப்பு

ஆ) சூழலின் மீது ஏற்படுத்தும் தாக்கம்

3. எல்லை நுகர்வு நாட்டத்தையும் எல்லை சேமிப்பு நாட்டத்தையும் சேர்க்க வரும் பெறுமதி ஒன்றுக்கு சமனான அமைவது ஏன்?

4. பொருளாதார இயக்கிகளைக் குறிப்பிட்டு அவற்றுக்கிடையிலான தொடர்பினை விளக்குக.

5. அ) மொத்த உள்நாட்டு உற்பத்திக்கும், மொத்த உள்நாட்டு செலவுக்கும், சென்மதி நிலுவைக்கும் இடையிலான தொடர்பு யாது?

ஆ) உற்பத்தி இடைவெளி மற்றும் பேரினப் பொருளாதார கொள்கைகளும் இடையிலான தொடர்பு யாது?

**05.** 1. சாத்திய வெளியீடு, உச்ச வெளியீடு என்பவற்றை வேறுபடுத்துக.

2. அ. பொருளாதார பின்னடைவு, பொருளாதார மந்தம் ஆகியவற்றின் பண்புகளைத் தருக

ஆ. விளைதிறன் இடைவெளி என்பதனால் கருதப்படுவதென்ன? இதனை பாதிக்கும் நான்கு காரணிகளைக் குறிப்பிடுக

3. தலா வருமானத்தின் அடிப்படையில் நாடுகள் வகைப்படுகின்றன. இங்கு வகுக்கப்படும் வருமான இடைவெளிகள் எத்தனை அமெரிக்க டொலர்களாக அமைகின்றன எனத் தருக.

4. அ. வேண்தகு அபிவிருத்தியின் குறிக்கோள்கள் எவை?

ஆ. உற்பத்தித்திறனை ஊக்குவிக்கும் ஆறு காரணிகளைத் தருக.

5. சமூகநல குறைகாட்டி என்ற வகையில் மொத்த உள்நாட்டு உற்பத்தியின் குறைபாடுகள்?

6. அ. மொத்த உள்நாட்டு உற்பத்தியை அளவிடுவதில் எதிர்நோக்கும் சவால்களை தருக.

ஆ. தேசிய வருமானத்தின் பெருக்கியின் செயற்பாடு எவ்வாறு அமையும் என்பதை ஒரு உதாரணத்துடன் விளக்குக.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**06.** 1. அ. பணத்திற்கான கேள்வியினை நிர்ணயிப்பன எவை?

ஆ. பணத்தின் பணிகளையும் அவற்றின் பொருளாதார முக்கியத்துவத்தையும் தருக.

2. அ. பணநிரம்பலை நிர்ணயிக்கின்ற காரணிகள் எவை?

ஆ. பணவீக்கத்தின் விளைவுகளாக இருக்கக் கூடியவை யாவை?

இ. வெளித்தெரியும் பணவீக்கத்தையும் வெளித்தெரியா பணவீக்கத்தையும் வேறுபடுத்துக.

3. அ. பணப் பெருக்கி என்பதை வரைவிலக்கணப்படுத்துக.

ஆ. அண்மைய பணத்தின் உள்ளடக்கங்கள் நான்கையும் குறிப்பிட்டு முக்கியத்துவம் நான்கையும் தருக

4.. வணிக வங்கியின் பணவீக்கத்தை நிர்ணயிக்கும் காரணிகளையும் மத்திய வங்கியின் பணவீக்கத்தையும் நிர்ணயிக்கும் காரணிகளையும் தனித்தனியே தருக.

5. அ. பணப்பெருக்கியை கணிப்பிதற்கான சமன்பாடுகள் இரண்டைத் தருக.

ஆ. இயங்கும் திறந்த சந்தையின் நடவடிக்கையின் பண்புகள் நான்கை குறிப்பிடுக.

**07.** 1. அ. பொது நிதியின் குறிக்கோள்களை அடைவதில் அரச வரவு செலவுத் திட்டத்தின் வகிபங்கு யாது?

ஆ. அரச வரவு செலவுத் திட்டத்தினை உருவாக்குவதற்கான நோக்கங்கள் மூன்றைக் குறிப்பிடுக.

2. அ. பூச்சிய வரவு செலவுத் திட்டத்தின் அனுகூலங்கள் இரண்டையும் பிரதிகூலங்கள் இரண்டையும் தருக.

ஆ. அரச வரவு செலவுத்திட்டத்தின் குறிக்கோள்கள் எவை?

3. அ. பாதீட்டுப் பற்றாக்குறையின் நிதியீட்டத்திற்கு உள்நாட்டு மூலகங்களை அதிகம் பயன்படுத்துவதினால் ஏற்படும் பின்விளைவுகள் யாவை?

ஆ. பொதுப்படுகடன் முகாமைத்துவத்தின் குறிக்கோள்கள் மூன்றைக் குறிப்பிடுக.

4. அ. நல்லாட்சியின் பண்புகளாக நீர் எவற்றை அடையாளப்படுத்துவீர்?

ஆ. நல்லாட்சி ஒரு நாட்டின் பொருளாதார அபிவிருத்திக்கு வழிசமைக்கும் எனக் கூறப்படுவது ஏன்?

5. அ. வரி விதிக்கப்படுவதற்கான நியாயங்களாக கருதப்படுபவை யாவை?

ஆ. நேர்வரி, நேரில் வரி ஆகியவற்றை வேறுபடுத்துக.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எமது நிறுவன வெளியீடாக உள்ள க.பொ.த. உயர்தர புதிய பாடத்திட்ட மாணவர்களுக்கான கடந்தகால வினாவிடைகள்

1. பொருளியல் - S. ஸ்ரீராம் B.A. (Econ)
2. கணக்கீடு - S. மகேஸ்வரன் B.com, Dip. in. Edu
3. வணிகக்கல்வி - P. உமாசங்கர் M.Com (Kelani)
4. அளவையியலும் விஞ்ஞானமுறையும் - A. விக்னேஸ்வரன் B.Sc, Dip in Edu
5. வணிகப் புள்ளிவிபரவியல் - A. விக்னேஸ்வரன் B.Sc, Dip in Edu
6. தமிழ் - T. மதிவதனன் B.A. Dip.in Edu
7. இந்து நாகரிகம் - T. மதிவதனன் B.A. Dip.in Edu
8. அரசறிவியல் - K. சதீஸ்கரன் M.A
9. வரலாறு - R. ரதீஸ்
10. புவியியல் - K. ராஜன் B.A, P.G. Dip. in. Edu
11. மனைப்பொருளியல் - K. பத்மாசனி M.Sc
12. இணைந்த கணிதம் - S. V. மகேந்திரன் B.Sc
13. உயிரியல் - S. ரூபசிங்கம் B.Sc, Dip inEdu, M.Ed
14. பௌதிகவியல் - A. கருணாகரர் B.Sc, P.G., Dip in Edu
15. இரசாயனவியல் - M. எட்வேட் B.Sc
16. General English - K. Jeyakumar B.A, P.G.D.E, PGDSNE
17. Biology - S. Rubasingham B.Sc, Dip in Edu, M.Ed
18. பொது சாதாரண பரீட்சை - P. உமாசங்கர்M.Com (Kelani)
19. Chemistry - M. Edward B.Sc
20. Physics - A. Karunagarar B.Sc, P.G., Dip in Edu

**விலை : ரூ. 150/-**

விநியோகம்

AB CREATOR & PUBLISHERS

41, 1st Floor, Brassfounder Street, Colombo 13
Tel : 0770616129

Printed by : Devi Printers Colombo 13. - 2434534

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org